மெஷிவருத்திரண்

6


5-8. 1933

N33.6.1
208707

880

வருட சந்தா ரூ. 3

Rgd. No. M. 2419



# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran.

Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.





| | | |
|---|---|---|
| Vol 6 | ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் | No 1 |
| | ச்ராவண மாஸம் | |
| புஸ்தகம் 6 | பௌர்ணமி (5—8—33.) | நெ. 1 |





| நெ. | பொருளடக்கம். | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 1 |
| 2. | வரலெக்ஷ்மீ வ்ரத கதை. | 9 |
| 3. | ஆசாரமாலை, | 11 |
| 4. | மணிமஞ்ஜரி (ஸ்ரீ நாராயணபண்டிதாசார்யார்) | 15 |
| 5. | ப்ரமாண சந்திரிகை. | 19 |
| 6. | தலவகார உபநிஷத்[illegible] | 21 |
| 7. | துளசியின் மஹிமை[illegible] | 23 |
| 8. | சங்கரலீலாவிலாஸம்[illegible] | [illegible] |
| 9. | பீமஸேன விஜய[illegible] | [illegible] |
| 10 | செய்தித்திரட்டு. | 31 |
| 11. | விசேஷதினங்கள். | 3[illegible] |

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
10 AUG 1933
MADRAS

ஆசிரியர்
பாகவத ரங்க[illegible]யார்.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்,

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**:—எந்த பாஷையிலுமே இதுவரை இப்படி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டியிருக்கிறபடியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபால் கூலி அணா 0—1—0

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்**:— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2. தபால் கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி**:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபால்கூலி அணா ஒன்று.

**துவைதமத விளக்கம்**:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபால்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்**:—(தமிழ்) அணா 4. தபால்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்**:— அணா 6. தபால்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்**:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபால்கூலி 0-6-0 ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபால்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். Certificate of Posting பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸனிலையம், கும்பகோணம்.

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ।
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

OFFICE OF THE REGISTRAR 10 AUG 1933 MADRAS

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(பதினெட்டாவது அத்யாயம்.)

(காபிரைட்) முன் தொடர்ச்சி.

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

விஷ்ணுவை தேவதையாகக்கொண்ட மந்திரங்களால் ஹவிஸ்ஸை ஹோமம் செய்யும்பொழுது அப்பொழுதே அக்னி குண்டத்தினின்றும் ஜொலிக்கும் நெருப்புத்தணலைப்போல் அக்னி பகவானே மகனாய் வெளிக்கிளம்பினார். கிரீடம் தரித்து கர்ண குண்டலங்களோடுகூடி ப்ரகாசிக்கும் ஸுவர்ண மாலையுடன் உத்தமமான கத்தியை எடுத்துக்கொண்டு சூரியனைப்போல வர்ணமுள்ள ரதத்தில் உட்கார்ந்துகொண்டு ஸிம்ஹநாதம் செய்துகொண்டு அந்த மகன் துருபதராஜனிடம் வந்து சேர்ந்தான். தைரியசாலியாயும் பிரகாசிப்பவனாயுமிருப்பதால் ஸகல வேதார்த்தங்களையும், பகவத் தத்வங்களையுமறிந்த இந்த மகனை யாஜன் முதலான ரிஷிகளும், துருபதராஜனும், திருஷ்டத்யும்னனென்றழைத்தனர். இந்த திருஷ்டத்யும்னனுக்குப்பின் பாரதி

தேவி வேதிமத்தி[illegible]ம ப்ரத்யக்ஷமாய் புறப்பட்டாள். எல்லா [illegible]ணம் (ஸம்ரக்ஷணம்) செய்வதால் முக்ய ப்ராண[illegible]ரென்ற பெயர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ப்ரதான முக்யப்ராணரின் பத்னியாதலால் பாரதி என்று நாமம். வேதவாக்யங்களுக்கு அபிமானியாதலால் ஸரஸ்வதி என்று நாமமுண்டு. சம், என்று ஸுகத்திற்குப் பெயர். ஸுகரூபியான வாயுபகவானை ஆசிரயித்திருப்பதால் இவளுக்கு ஸ்ரீ என்றும் நாமம். சசிதேவி, ச்யாமளாதேவி, உஷாதேவி இவர்கள் முறையே இந்திரன், யமன், அசுவினீ தேவர்களை ஆசிரயித்தவர்களாதலால் இவர்களுக்கும் ஸ்ரீ என்று பெயருண்டு. இவர்களின் ஆவேசமிருந்ததால் த்ரௌபதி தேவிக்கு ஸ்ரீ என்று பெயர். அந்த துருபதராஜனின் மகளான துரௌபதி, ஸ்திரீ ஜனங்களின் உத்கிருஷ்டமானவளாதலாலும், கிருஷ்ண வர்ணமுள்ளவளாதலாலும், உத்கிருஷ்டமான ஆனந்தமுள்ளவளாதலாலும், கிருஷ்ணையென்று அழைக்கப்பெற்றாள். பிறக்கும்பொழுதே ஸர்வக்ஞையாகவும் எல்லா ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், ஸம்பூர்ண யௌவனமுள்ளவளாயும், ஜரை இல்லாதவளாயும், உலகில் மகா ஸௌந்தரியமுள்ளவளாயுமானாள். விசேஷமாய் உமையின் அம்சம் பெற்றவளாயும், ஸகலமான திவ்ய லக்ஷணமுள்ளவளாயுமானாள்.

---

## துரௌபதி தேகத்திற்குள் ஐந்து தேவஸ்திரீகள்.

---

பரமசிவனுடைய பாரியாளான உமா, இந்திரனுடைய பாரியாளான சசீ, யமனுடைய பாரியாளான சாமளா, அசுவினீ தேவர்களின் பாரியாளான உஷா இந்த நால்வர்களும் ஒருஸமயம் அவர்களின் பர்த்தாக்களுடன் சேர்ந்து ப்ரம்மா பார்த்திருக்கும்பொழுது அதிகமான ஹாவபாவ விலாஸம் காட்டினார்கள். அப்பொழுது ப்ரம்மா நீங்கள் மனுஷ்யர்களாய்ப் பிறப்பெடுங்கள்; அந்த மனுஷ்ய ஜன்மத்தில் அன்ய புருஷ ஸங்கமத்தைச் செய்யுங்களென்று நான்கு தேவஸ்திரீ ஜனங்களுக்கும் சாபம் கொ



டுத்தார். இப்படி சாபமடைந்த அந்த உமா முதலியோர் நாம் எந்த உத்தம புருஷனை அடைவதென்று யோசித்து பாரதி தேவியிடம் வந்து அவளிடம் தாங்கள் பிரம்மாவிடம் செய்த அபராதத்தையும், பிரம்மா தங்களுக்குக்கொடுத்த சாபத்தின் விதத்தையும் அறிவித்து பாரதி தேவியை ஆயிரம் வருஷம் சுசுரூஷை செய்து இவ்வாறு பேசினார்கள். பாரதிதேவியே! சாபத்தால் நாங்கள் மனுஷ்ய ஜன்மாவை அடையவேண்டியிருக்கிறது. எப்படியும் நாங்கள் அன்யபுருஷ ஸம்பந்தத்தை அடைய வேண்டும். அதிலும் வாயுபகவானைத்தவிர அன்ய புருஷனை நாம் தொடமாட்டோம். மற்றொரு இடத்தில், முன்பு ஒரு சமயம் நாங்கள் நால்வரும் ஒரு சரீரத்தில் ப்ரவேசித்து விளையாட்டாய் பிரம்மாவை வஞ்சிப்பதற்காக மூன்றுதரம் சென்றோம். அப்பொழுது பிரம்மா நீங்கள் மூன்றுதரம் என்னை வஞ்சிப்பதற்காக வந்ததால் கர்விஷ்டர்களான நீங்கள் ஒரே சரீரமுள்ளவர்களாய் மூன்றுதரம் மனுஷ்ய ஜன்மாவை அடையுங்களென்று சாபம் கொடுத்தார். இவ்வாறு ப்ரம்மாவால் இரண்டுதடவை எங்களுக்கு சாபம் ஏற்பட்டிருப்பதால் பாரதிதேவியே! நான்கு ஜன்மங்களிலேயும் உன்னுடன் ஒரே சரீரமுள்ளவர்களாய் இருக்க விரும்புகிறோம். பூமியில் நான்கு ஜன்மங்கள் எங்களுக்கு வரப்போகிறது. நீ எங்களுடனிருந்தால் உன்னுடன் வாயுபகவானைத்தவிர இதராள் சேரமாட்டார்கள். இது பகவானுடைய அநாதிநித்யமான நியமம். ஆகையால் உன்னுடன் ஒரே சரீரமுள்ள எங்களை வாயுபகவானைத்தவிர இதராள் தொடமாட்டார்கள் என்று தேவஸ்திரீகள் ப்ரார்த்திக்கவும் பாரதிதேவி அப்படியே ஆகட்டுமென்று சொல்லி பார்வதி, சசீ, சாமளா உஷை ஆகிய நால்வர்களுடன் சேர்ந்து ப்ராம்மண கன்னிகையாய் பிறந்தாள். அந்த ப்ராம்மண கன்னிகையின் ஜன்மத்தில் பார்வதியுடன் கூடிய நால்வர்கள் ஒரு சரீரத்திலிருந்துகொண்டு பரமசிவனைக்குறித்து மகா தபஸ் செய்தார். அந்த சரீரத்திலிருந்த பாரதிதேவி ருத்திர சரீரத்திலுள்ள சிவநாமகரான ஸ்ரீ ஹரியை அவள் செய்யும் வேலை மற்றவர்களுடன் ஏகரூபமாய் இருக்க மகாவ்ரதம் கொண்டு தவம் செய்து சந்தோஷப்படுத்தி

ளாள். ருத்திரனின் சரீரத்திலுள்ள ப்ரபுவான சிவனென்ற பெயருள்ள ஸ்ரீஹரி பாரதிதேவிக்கு நான்கு ஜன்மங்களிலேயும் அவளுடைய பர்த்தாவான வாயுபகவானுடைய சம்பந்தத்தை அடையும்படிக்கும் பதியான வாயுபகவானுடன் சேர்ந்து பகவானை அபரிமிதமாய் சந்தோஷப்படுத்தும்படிக்கும் வரனைக்கொடுத்தார். பரமசிவனே தான் பார்வதி முதலான நால்வர்களுக்கு நான்கு மனுஷ்ய ஜன்மங்களில், சில ஜன்மங்களில் மட்டில் அவர்களுக்கு அவர்களின் புருஷ ஸம்பந்தமேற்பட்டுமென்று வரனைக்கொடுத்தார். அந்த வரன் வந்தவுடன் அந்த ஐந்து தேவஸ்திரீகளும் சீக்கிரமே அந்த ப்ராம்மண கன்னிகையின் சரீரத்தை விட்டு ஒரே காரியத்தில் புத்தியுள்ளவர்களாய் இந்திரசேனை என்ற பெயர்கொண்ட ஓர் சரீரத்துடன் நளசக்ரவத்தியின் மகளாய்ப் பிறந்தனர். அப்பொழுது முத்கலரென்ற ரிஷி தபம் செய்திருந்தார். அந்த ரிஷி ஒருசமயம் கதையைக் கேட்கும்பொழுது சதுர்முகன் தன் பெண்ணை விரும்பினானென்று சிரவணம் செய்தார். அப்பொழுது முத்கலர் பிரம்மாவை பரிகாசம் செய்தார். அப்பொழுது பிரம்மா முத்கலருக்கு நீ காமசூன்யனென்று கர்வம் பிடித்தவனே! நரகாதி அநர்த்தங்களை அடைய பாரதி முதலான ஐந்து தேவஸ்திரீகளின் ஸங்கமம் செய் என்று சாபம் கொடுத்தார். இவ்வாறு சொல்லப்பட்ட முத்கல ரிஷி ப்ரம்மாவை உத்தேசித்து தபம் செய்து ப்ரம்மாவை சந்தோஷப்படுத்தினார். பிறகு ப்ரம்மா முத்கலருக்கு சாபநிவிருத்தியாகிய அனுக்ரஹம் செய்தார். என்னவெனில் ஹே முத்கலரிஷியே! நீ பாரதி முதலான தேவஸ்திரீகளுடன் ஸங்கமம் செய்யப்போவதில்லை, வாயுபகவான் உன்னுடைய சரீரத்திலிருந்துகொண்டு ஸங்கமம் செய்யப்போகிறார். நீ அப்பொழுது மூர்ச்சையடைந்து ஞான சூன்யனாய் ஆகப்போகிறாய். ஆகையால் உனக்கு தேவஸ்திரீகளின் ஸம்பந்தத்தாலேற்பட்ட பாபம் வருவதில்லை. என்றிவ்வாறு சதுர்முகன் அனுக்ரஹம் செய்தபிறகு வாயுபகவான் முத்கலரிஷியை ப்ரவேசம் செய்தார். பிறகு முத்கலரிஷி இந்திரசேனையை விவாகம் செய்துகொண்டு கிருஹஸ்தாசிரமி ஆனார். பிறகு ஜகத்ப்ரபுவான வாயுபகவான் இந்திரசேனை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 AUG 1933 MADRAS



யுடன் வெகுகாலம் க்ரீடித்தார். பிறகு வாயுபகவான் மூர்ச்சையாய் கிடந்த முத்கலரை எழுப்பிவிட்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டுபோனார். பிறகு முத்கலர் தேசாந்திரம்போய் தபஸ் செய்தார். பிறகு பதியால் விடப்பட்ட இந்திரஸேனை மகா தபஸ் செய்தாள். இந்திரசேனையின் சரீரத்திலிருந்த பாரதிதேவி ருத்திராந்தர்கதனான விஷ்ணுவை பூர்வ ஜன்மம்போல் ஒருவகையான காரியமிருக்க தவம் செய்து சந்தோஷப்படுத்தினாள். பார்வதி முதலான நான்கு தேவஸ்திரீகள் முன்ஜன்மத்தின்படி ருத்திரோத்தேசமாய் தபம் செய்தனர். ருத்திரனும் ருத்திராந்தர்கதரான விஷ்ணுவும் ப்ரத்யக்ஷர்களானபின் ஒரே சரீரத்திலுள்ள ஐந்து தேவஸ்திரீகளும் தன் புருஷன் வேண்டும், தன் புருஷன் வேண்டுமென்று தனித்தனியே வேண்டிக்கொண்டனர். ஆகையால் பரமசிவனுடைய வாயினின்றும் உனக்கு பர்த்தா கொடுத்தேன் என்று வார்த்தை ஐந்து தடவை வந்தது. சிவாந்தர்கதனான நாராயணன் பாரதிதேவிக்கு முன்போல் வரனைக் கொடுத்தார். மற்ற நான்கு ஸ்திரீகளுக்கு பரமசிவனே நான்கு பர்த்தாக்களைக் கொடுத்தார். பரமசிவன் இந்த வரனைக் கொடுத்தபிறகு பார்வதி முதலான நால்வர்கள் தேவர்களின் அவதாரத்திற்காக நாம் ஐவர்கள் அவர்களின் பத்னிமார்களாகிறோமென்று அறியவில்லை. ஏனென்றால் ஒரு சரீரத்தில் ஜலமும் பாலும்போலிருந்த ஐந்து சேதனர்களும் வசித்துக்கொண்டிருந்த பொழுது உன் பர்த்தா சீக்கிரம் வரட்டுமென்று பாரதியைப் பார்த்து விஷ்ணு சொன்ன வார்த்தையையும், உன் பர்த்தா சீக்கிரம் வரட்டுமென்று பரமசிவன் நான்கு தடவை உமாதி நால்வர்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தையையும்கேட்டு ஒரு சரீரத்திலிருந்த இந்த ஐவர்கள், தானொருவளே இந்த சரீரத்திலிருப்பதாய் எண்ணி எனக்கு ஒருவளுக்கு ஐந்து பதியை ஏன் பரமசிவன் கொடுத்தாரென்று பார்வதி முதலியோர் தெரிந்துகொண்டனர். இந்நால்வரும் ஒரு சரீரத்திலிருந்துகொண்டு அழுதனர். இந்த ஸ்திரீ அழுதுகொண்டிருக்கையில் இந்திரன் அங்கு வந்தான். அந்த உத்தம ஸ்திரீயான இந்திரஸேனையைப்பார்த்து நீ எதற்காக அழுகிறாய் என்று கேட்டார். இந்திரஸேனை

ப்ரம்மசாரியான ருத்திரனை இந்திரனுக்குக் காட்டி நான் ஒரு பர்த்தாவைக்கேட்க இந்த ப்ரம்மசாரி ஐந்து பதிகளைக் கொடுத்திருக்கிறார், ஆகையால்தான் நான் அழுகிறேனென்றாள். பிறகு இந்திரன் அந்த பிரம்மசாரியை சிவனென்றறிந்துகொள்ளாமல் உரக்கப் பேசினான். என்னவென்றால் ஹே துர்புத்திபிடித்த ப்ரம்மசாரியே! நான் மூன்று உலகத்தையும் ரக்ஷித்துவரும் பொழுது இந்த ஸ்திரீயை அவள் என்ன அபராதத்தையும் செய்யாதிருக்கையில் ஏன் சபித்தாய் என்றிவ்வாறு இந்திரன் பேசவும் பரமசிவன் பதிலுரைத்தார் ஹே இந்திரா! ஸ்வர்க்கத்திலிருந்து கீழே விழு. மனுஷ்ய சரீரத்தை அடை. இந்த ஸ்திரீக்கே அடுத்த ஜன்மத்தில் நீ பர்த்தா ஆகு. இந்த ஸ்திரீ உன்னையே ஸ்வீகரிக்கப்போகிறாள். என்னை அவமதித்து உன்னைப்போல் இந்திர பதவியை ஆண்ட தேவர்கள் இந்த மலையின்கீழ் விழுந்திருக்கின்றனர். அவர்களைப் பார் என்று பரமசிவன் சொல்லவும் மகேந்திரன் அந்த மலையைப் பிடுங்கிப்பார்க்க அதன் கீழ் மனுஷ்ய லோகத்தில் எங்கே அவதரிக்கிறதென்று ஏகாந்தமாய் ஆலோசித்துக்கொண்டிருந்த போன மன்வந்தரங்களில் இந்திரபட்டத்தை ஆண்டவர்களான, அந்த மலையின் கீழே உட்கார்ந்திருந்த வாயு பகவான், யமன், அசுவினீதேவர்கள் ஆகிய நான்கு தேவதைகளை இந்திரபகவான் கண்டார். பிறகு இந்திரபகவான் உத்தமர்களால் அடையத்தகுந்தவனும் வரனைத்தருபவனுமான ஸ்ரீவிஷ்ணுவை சரணமடைந்து அந்த விஷ்ணுவின் ப்ரஸாதத்தால் நரன், ஹரி வாயுசேஷன் இந்த அம்சமுள்ளவனாய் பூமியில் அர்ஜுனனென்று பிறந்தான். அப்பொழுது பிரம்மா சிவனிடம் வந்து ஹே பரமசிவ! வாயு முதலான தேவதைகளை, அவமானம் செய்து, உன்னை அவமானம் செய்ய அவர்கள் மலையின் அடிப்புறத்தில் விழுந்திருக்கின்றனரென்று இந்திரனிடம் அஸத்யம்பேசியதால் நீ மனுஷ்ய லோகத்தில் சீக்கிரமே அசுவத்தாமாவென்று பிறந்து நீ எந்த இந்திரனிடம் அஸத்யம் பேசினாயோ மனுஷ்ய ரூபியான அந்த இந்திரனால் தோல்வியடையப்போகிறாய்; நான் சாபம் கொடுத்த பார்வதீ முதலான தேவஸ்திரீகளுக்கு என்னுடன் கலந்து யோசிக்காமல் அவர்களின் பதிஸம்பந்தமேற்படும்படி வரனைக்கொடுக்



கதால் நீ மனுஷ்யலோகத்தில் உன் பத்தினியை அடையப்போவதில்லை; உனக்கு மனுஷ்யத்வம் நீங்கியபிறகு பாரதி தேவியின் சரீரத்திலிருந்து கிளம்பிய பார்வதிதேவியை நீ கைலாஸத்தில் ருத்திரனுடன் ஒன்றாய்ப்போய் அடையப்போகிறாய்; பார்வதி தேவிக்கு நீ கொடுத்த அவளுடைய பதிஸம்பந்தமடையும்படியான வரன் உன் விஷயத்தில் அஸத்யமாகட்டுமென்று சதுர்முகன் சிவனுக்கு சாபம் கொடுத்தார். இந்த இந்திரசேனை ஐந்து தேவஸ்திரீகளுக்கு சரீரமாக திரௌபதி என்று பிறக்கப்போகிறாள். நீ யாருடைய விஷயத்தில் அஸத்யம் பேசினாயோ அந்த வாயுபகவான் முதலான ஐந்து தேவர்கள் பாரதி முதலான அந்த நான்கு தேவஸ்திரீகளுக்கு பர்த்தாக்களாகின்றனர். பர்த்தாவை அடையாதவளான பார்வதிதேவி பாரதிதேவியுடன் சந்தனம் புஷ்பம் முதலியவைகளை வாங்கிக்கொள்ளும் காரியங்களில் மட்டும் சேர்ந்து ப்ரவர்த்திக்கிறாள். பதியுடன் ஸம்போககாலத்தில் அவள் ப்ரவிருத்திப்பதில்லை. வாயுபகவான் முதலான இந்த தேவர்கள் தேவகாரியமாகிய ப்ரயோஜனம் மகத்தானதால் பூமியில் பிறந்தனரென்று சுருதி இருக்கிறது. அவர்கள் பூமியில் பிறப்பதற்கு உன் அவமானம் காரணமாகாது. நீ மனுஷ்யலோகத்தில் வெகு நீண்டகாலம் வாஸம் செய்யப்போகிறாய். என்றிவ்வாறு பிரம்மா சிவனைப்பார்த்துச் சொல்லி ஸத்யலோகம் சென்றார். அந்த சிவன் அசுவத்தாமாவென்று பிறந்தான். அந்த இந்திரஸேனை ஐந்து தேவஸ்திரீகளின் ரூபமுள்ளவளாய் திரௌபதி என்று பிறந்தாள். இப்பொழுது சொன்ன இந்த ப்ரமேயங்களும் இதற்கு முன் அத்யாயங்களில் சொன்ன எல்லா விஷயங்களும் புராணங்களுடன் கூடிய வேதங்களினின்றும், பாரதத்தினின்றும் தெரியவருகிறது. இவ்வாறு திருஷ்டத்யும்னன் த்[illegible] பதி என்று பிள்ளையும், பெண்ணும் பிறக்கவும் பாஞ்சா[illegible]ரகத் சத்தார் எல்லோரும் ஆனந்தமடைந்தனர்.

## திருஷ்டத்யும்னனின் வித்யாப்யாஸ[illegible]

த்ரௌபதி த்ருஷ்டத்யும்னன் இவர்கள் மனு[illegible] அன்னத்தை புஜித்ததாலும் மனுஷ்யர்களின் ஸஹவ[illegible]

ண்டும்?
ளுடைய
ந்த புண்ய
தைக்கேட்டு

மனுஷ்யர்கள் இஷ்டி செய்து அவர்களை ஸம்பாதித்துக்கொண்டதாலும் அவர்களுக்கு மனுஷ்யர்களின் ஸ்வபாவம் சிறிது இருந்தது. இவர்கள் மனுஷ்ய யோனியில் பிறக்கவில்லையாதலால் மனுஷ்யர்களின் ஸ்வபாவம் இவர்களுக்கு விசேஷமாயில்லை. அப்பொழுது துருபதராஜனுடைய பத்தினி தன்னிடம் இந்த தன் மக்களுக்கு தாயென்று ஸ்நேகமிருக்கவேண்டுமென்று யாஜோபயாஜர்களை யாசித்தாள். அவர்கள் இந்த வரனைக் கொடுத்தனர். த்ரோணாசாரியார் தன்னைக்கொல்ல த்ரிஷ்டத்யும்னன் பிறந்திருப்பதாய் கேட்டார். தன் சத்ருவுக்கு கூட அஸ்திரங்களை துரோணாசாரியார் உபதேசித்தாரென்றகீர்த்தி வருவதற்காக துரோணர் திருஷ்டத்யும்னனுக்கு அஸ்திரங்களைக்கொடுத்தார். த்ருஷ்டத்யும்னன் அஸ்திரங்களிலுள்ள ஆசையால் அஸ்திரங்களைப்பெற்றான். த்ருஷ்டத்யும்னன் வீரியவானாகினும் பரசுராமரிடமிருந்து கிடைத்த அஸ்திரங்கள் தேவர்களிலும் தூர்லபமானதால் துரோணாசாரியார் அவனுடைய சத்ருவானாலும் அவரிடமிருந்து அஸ்திரங்களை வாங்கிக்கொண்டான். பீமார்ஜுனர்கள் துருபதராஜனை பிடித்து கட்டினார்களென்று ப்ரபுவான ஸ்ரீகிருஷ்ணர் கேட்டு பாண்டவர்களிடம் இணையற்ற விசுவாஸமிருப்பதை உலகில் அறிவிப்பதற்காக கிருதவர்மாவை பாண்டவர்களிடமனுப்பிவைத்தார். சூரராஜனின் தம்பியின் தௌஹித்ரனான கிருதவர்மா பாண்டவர்களை மரியாதை செய்து ஸ்ரீ கிருஷ்ணபக்தனானதாலும் பாண்டவர்களின் சிறிய தாயார் மகனாகிய தம்பியானதாலும் பாண்டவர்களால் மரியாதை பெற்று ஸ்ரீகிருஷ்ணரிடம் போனான். கிருதவர்மாவை ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவர்களிடமனுப்பிய முதற்கொண்டு தேவர்களின் கக்ஷியைச்சேர்ந்த அரசர்கள் பீமார்ஜுனர்களின் ...தையும் ஸ்ரீகிருஷ்ணருக்கு பாண்டவர்களிடமுள்ள விசேஷ ...ட்பையுமறிந்தும் அவர்கள் எண்ணமானாத காரியங்க... ஸ்ரீகிருஷ்ணரால் பலதடவை பராஜயமடைந்ததாலும் ஜரா... ...ட்டு பாண்டவர்களை ஆசிரயித்தனர்.

இந்திரனர்

பார்வதி டு

சிக்காமல்

(தொடரும்).



# வரலக்ஷ்மீ வ்ரத கதை.

[வரலக்ஷ்மீ வ்ரத கதையின் மொழிபெயர்ப்பு]

பவிஷ்யோத்தர புராணத்தில் சொல்லப்படுவதாவது:— ஸூதர்: ரிஷிகளே! விரதங்களில் உத்தமமான விரதத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள். வரலக்ஷ்மீ விரதம் என்றிருக்கிறது. ஸர்வ ஸம்பத்துக்களையும் கொடுக்கக்கூடியது. கைலாஸத்தில் பரமசிவனை பார்வதி ப்ரசினம் செய்தாள். இந்த கைலாஸத்தின் கொடுமுடி வெகு அழகாய் இருந்தது. நானாவகையான பார்ஷதகணங்கள் அங்கிருந்து வந்தனர். பாரிஜாத விருக்ஷங்கள் ஏராளமாய் முளைத்துக்கிடந்தன. பலவகை மிருக ஜாதிகள் நடமாடிக்கொண்டு சோபிதமாயிருந்தன. பாடலம், சம்பகம், அசோகம், புன்னாகம், பகுளம் இந்தமரங்கள் முளைத்திருந்தன. தேவதாரம், அகரு, ஆலை, இலந்தை இந்தமரங்கள் பிரகாசித்திருந்தன. கோமேதகம், முத்து, வைடூரியம், பத்மராகம், இந்த ரத்னங்களால் அது சோபிதமாயிருந்தது. புஷ்பராகம் முதலிய ரத்னங்களின் ஒளி எங்கும் வீசிவந்தது. சித்தர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள், வித்யாதரர்கள் இவர்கள் கூட்டமாய் அங்கிருந்தனர். குபேரன், வருணன், இந்திரன் முதலிய திக்பாலகர்கள் சூழ்ந்திருந்தனர். நாரதர், அகஸ்தியர், வால்மீகி, பராசரர், முதலிய ரிஷிகள் துதித்திருந்தனர். இப்பேர்பட்ட கைலயங்கிரியில் ரத்னமயமான பீடத்தில் ஸுகமாய் உட்கார்ந்திருந்த லோகத்திற்கு க்ஷேமத்தைத்தரும் பரமசிவனை உலகத்தாருக்கு அனுக்ரஹத்தைக் காட்ட உத்தேசித்து பார்வதி சந்தோஷமாய் ப்ரசினம் செய்தாள். பார்வதி: பகவன்: ஸர்வலோகத்திற்கும் ஈசனே! ஸர்வ பிராணிகளுக்கும் ஹிதம் செய்வதில் ஈடுபட்டவரே! எது இரகசியமாய் புண்யகரமான விரதமோ அதை எனக்குச் சொல்லும். பரமசிவன்: தேவி! வரங்களில் உத்தமமானதும் ஸர்வ ஸௌபாக்யத்தை விருத்தி செய்வதும் ஸர்வ ஸம்பத்துக்களையும் சீக்கிரமே தருவதும் புத்ர பௌத்ரர்களை வளரச்செய்வதுமான வரலெக்ஷ்மீ விரத மென்னும் மனோகரமான விரதமொன்று இருக்கிறது. சிராவண மாஸத்து சுக்லபக்ஷத்தில் பௌர்ணமிக்கு சமீபத்திலுள்ள சுக்ரவாரத்தை கடந்து போகாமலிருக்கும் நாள் அந்த விரதத்திற்கு எற்றதாகும். பார்வதி:—அதை எந்த விதிப்படி செய்யவேண்டும்? தேவதையார்? எப்படி அந்த தேவியை ஆராதித்தால் அவளுடைய மனது ஸந்தோஷமடையும். பரமசிவன்:—ஹே பார்வதி! அந்த புண்யகரமான வரலக்ஷ்மீ விரதத்தைப்பற்றி சொல்லுகிறேன். அதைக்கேட்டு

விட்டால் பிறகு நீ அதற்கு சுவாதீனமாகிவிடுவாய். குண்டினமென்று ஓர் நகரமிருந்தது. ஸர்வலக்ஷணங்களோடும் கூடியது. தங்கமயமான ப்ராகாரத்தோடு கூடியது. தங்கமயமான வீடுகளால் பிரகாசிக்கப்பட்டிருந்தது. சாருமதி என்று மங்கள சொரூபியான ஓர் பிராம்மண ஸ்திரீயிருந்தாள், மகா பதிவ்ரதை, மகா பாக்யசாலி, மாமன் மாமியார்களின் இஷ்டப்படி நடப்பவள், கலைகளை அறிந்தவள், படித்தவள், எப்பொழுதும் அழகாய் பேசுகிறவள், தெளிவான சித்தமுள்ள அந்தஸ்திரியின் சொப்பனத்தில் மகாலட்சுமி தோன்றி ஹே கல்யாணி! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும் நான் வரலக்ஷ்மி வந்திருக்கிறேன். சிராவண மாஸத்தில் பௌர்ணமிக்கு முன்பு சுக்ரவாரத்தில் என்னை பூஜிப்பாய். உன் அபீஷ்டத்தை வரமளிக்கிறேன், என்று சொன்னாள். அந்த ஸ்திரி மிகுந்த ஸந்தோஷத்துடன் வரலக்ஷ்மியைப்பார்த்து சொன்னாள் சாருமதி.—எல்லா ஜனங்களுக்கும் வரனையளிக்கக்கூடிய தாயே உனக்கு நமஸ்காரம். புண்யமான சொரூபமுள்ள நீ, எல்லோராலும் சரணம் புக வேண்டியவளே! மூவுலகத்தாராலும் நமஸ்கரிக்கப்பட்டவளே! விஷ்ணுவின் வக்ஷஸ்தலத்திலிருப்பவளே! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய கடாக்ஷம் விழுந்தால் அவன் தன்யன். அவன் குணங்கள் பொருந்தியவன். எல்லோரும் அவனை சிலாகிப்பார்கள். அவன் குடும்பமுள்ளவனாய் ஆவான் அவன் சூரன், அவன்பண்டிதன், எத்தனையோ ஜன்மங்கள் நான் செய்த புண்யத்தால் உன்னுடைய பாதாரவிந்தத்தை ஹே ஹரியின் பத்தினியே! பார்க்கிறேன். இவ்வாறு துதிக்கப்பட்ட அந்த மகா லட்சுமி அவளுக்கு அநேக வரன்களைத் தந்தாள். பிறகு பரமசுத்தையான சாருமதி தடபுடலாய் ஸ்வப்பனத்தின்றும் எழுந்து பந்துக்களிடம் இந்த ஸ்வப்பன விருத்தாந்தங்களை எல்லாம் அறிவித்தாள். பந்துக்கள் எல்லோரும் இதைக்கேட்டு விட்டு பலே பலே என்று சிலாகித்தனர். அப்படியே செய்கிறோமென்று அந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். பாக்யவசத்தால் வரலக்ஷ்மீ பண்டிகை நாள்வந்தவுடன் ஸ்திரீ ஜனங்கள் ப்ரஸன்னமான மனதுடன் பரமசுத்தர்களாய் அழகான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு நூதனமான அரிசி பூர்ணமான கும்பத்தில் ஆலைக் கொழுந்துகளை வைத்து அங்கு மகாலட்சுமியை ஆவாகனம் செய்து ஆராதனையுடன் பூஜித்தனர். தாமரையை ஆசனமாகக்கொண்டவள் நீ. தாமரையை கையில் தரித்தவள், எல்லாஜனங்களாலும் பிரதானமாய் பூஜிக்கப்படுகிறவள். நாராயணனுக்கு ப்ரியையானவள். ஹே மஹா லட்சுமி! எப்பொழுதும் என்னிடம் அன்புள்ளவளாய் இரு! என்று இப்படி மந்திரம் சொல்லி கிரமப்படி எல்லா உபசாரங்களையும் செய்து



வலது கையில் நூதனமான ஸூத்ரக்கயிறை ஸ்திரீஜனங்கள் தரித்தனர். குடும்பிகளான பிராம்மணனுக்கு வாயன தானம் செய்தனர். பிறகு தேவியின் சமீபத்தில் ஸ்திரீகள் ஹவிஸ்ஸுக்களைச் செய்தனர். உடனே தேவியின் அருளால் அவர்கள் முத்து மாணிக்கங்களால் பூஜிதர்கள் ஆனார்கள். காலில் பாதஸரங்களை அணிந்தவர்களாய் முத்துமாலைகளை தரித்தவர்களாய் அன்னதானம் செய்பவர்களாய் பந்துக்களை போஷிப்பதில் கருத்துள்ளவர்களாய் ஆகி யானை, குதிரை, ரதம் இவைகள் நிறைந்த அவர்களின் வீட்டுக்குச்சென்றனர். சாருமதி சொன்னதை ஒவ்வொருவரும் பேசிக்கொண்டனர். இது ஸத்யமே, இது ஸத்யமே. வரலக்ஷ்மீவிரதம் மங்களகரமானது. சாருமதி முதலான எங்களுக்கு எங்கள் அபீஷ்டங்களெல்லாம் கிடைத்துவிட்டது. இந்த சாருமதி மகா பாக்யவதியாக வெகுநாளிருக்கட்டும். அவளும் மாணிக்யமயமான ஒட்டியானத்தை தரித்து ஆபரணங்களால் பூஷிதையாகி எப்போதும் அன்னதானம் செய்பவளாய் ஸாவித்ரியைப்போல் பிரகாசித்தாள். அதுமுதற்கொண்டு உலகில் இந்த விரதம் பிரவிர்த்தியடைந்தது. இந்த சுபமான வரலக்ஷ்மீவிரதம் உனக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதை புருஷர்களும் ஸ்திரீகளும் பக்தியுடன் செய்தால் அவர்கள் வரலக்ஷ்மியின் ப்ரஸாதத்தால் ஸுகசாலிகளாய் ஆகிறார்கள். இவ்வாறு சந்தோஷமாய் மகாதேவனான பரமசிவன் பார்வதிக்குச் சொன்னார். இதையார் சிரவணம் செய்கிறாரோ சிரவணம் செய்துவைக்கிறாரோ வரலக்ஷ்மியின் ப்ரஸாதத்தால் அவருடைய எல்லா காரியங்களும் சித்தியடைகின்றன.

# ஆசாரமாலை.

(முன் தொடர்ச்சி.)

பிறகு யக்ஞோபவீதத்தை மாலாகாரமாய் போட்டுக்கொண்டு மேல் உத்தரீயத்தை முழங்கையில் வைத்துக்கொண்டு இரண்டுதரம் ஆசமனம் செய்து உடம்பை உலர்ந்த வஸ்திரத்தால் உட்கார்ந்து தொடைத்துக் கொள்ளவேண்டும். ஈரமான வஸ்திரத்தை பிழிந்து அதை பிரித்து எழுதட்டை உதறினால் அது உலர்ந்த வஸ்திரத்துக்கு ஸமானமாகுமென்பது ஸ்மிருதிக்காரர்களின் அபிப்பிராயம். உடம்பைத் தொடைத்துக்கொள்ளும்முன் இந்த வஸ்திரத்தை தலையில் வைத்து வாஸுதேவ த்வாதசாக்ஷரியால் ப்ரோக்ஷணம் செய்யவேண்டுமென்று ஓர் ஸ்மிருதி விதிக்கிறது. இவ்வாறு ஸ்நான விதியை முடித்துக்கொண்டு யஸ்ய

ஸ்மிருத்யா ச என்ற மந்திரத்தைச்சொல்லி அநேன பாகீரதி ஸ்நானேன பகவான் பாரதீரமண முக்யப்ராணாந்தர்கத ஸீதாபதி ஸ்ரீராமச்சந்திர: ப்ரீயதாம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து என்று ஸ்நான பலத்தை பகவானுக்கு ஸமர்பணம் செய்யவேண்டும். இது வாருணஸ்நானமாகும். ஜலத்தில் மூழ்கி ஸ்நானம் செய்வது வாருணஸ்நானம். வாருணஸ்நானமல்லாதஸ்நானங்களுமுண்டு. ஸ்நானத்தில் ஆக்னேயம் வாருணம், ப்ராம்மம், வாயவ்யம், திவ்யம், ஸாரஸ்வதம் என்று ஆறுவகை உண்டென்று ஓர் ஸ்மிருதிக்காரர் அறிவிக்கிறார்.

**பஸ்ம ஸ்நானம்:**— இது ஆக்னேய ஸ்நானமாகும். அக்னிஹோத்ராதிகளைச் செய்த அக்னியின் சாம்பலை இடதுகையில் வைத்துக்கொண்டு அக்னிரிதி பஸ்ம முதலான மந்திரங்களைச்சொல்லி அபிமந்திரித்து ப்ரணவத்தால் ஸர்வாங்கங்களை தடவிக்கொள்வது பஸ்மஸ்நானமாகும். உபாகர்மகாலத்தில் இதன் முறை அநுஷ்டிக்கப்படுகிறது.

**மந்த்ர ஸ்நானம்:**— இது ப்ராம்ம ஸ்நானமென்றழைக்கப்படுகிறது. ஜலத்தில் ஸ்நானம் செய்யமுடியாதவர்களுக்கு இந்த ஸ்நானம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஈரவஸ்திரத்தால் உடம்பைத் துடைத்துக்கொண்டு வேறு வஸ்திரமுடுத்தி காயத்ரியால் அபிமந்திரித்த ஜலத்தைக்கொண்டு ஆபோஹிஷ்டாமயோபுவ: என்ற மந்திரத்தால் கால் தலை ஹிருதயத்திலும் தலை ஹிருதயம் காலிலும் பிறகு ஹிருதயம் கால் தலையிலும் ப்ரோக்ஷணம் செய்துகொண்டு, காயத்ரியால் அபிமந்திரித்த ஜலத்தை ஓம் என்று உட்கொள்ளவேண்டும். இதுதான் மந்திரஸ்நானமென்பது. கிருகஸ்தன் மலமூத்ராதிகளைச் செய்தபின் இந்த மந்திரஸ்நானம் செய்யவேண்டும். அதனால் பரிசுத்தனாகிறான். ஸங்யாவி மூத்ரோத்ஸர்ஜனம் செய்தால் முழங்கால் வரையிலும், மலோத்ஸர்ஜனம் செய்தால் இடுப்பு வரையிலும் நனைத்து இரண்டுதடவை ஆசமனம் செய்தால் சுத்தி.

**காபில ஸ்நானம்:**— ஜலத்தில் மூழ்கி அல்லது தலையில் ஜலத்தைக் கொட்டிக்கொண்டு ஸ்நானம் செய்யமுடியாதவர்கள் இடுப்புவரை நனைத்துக்கொண்டாலும் அது ஸ்நானமாகும். இதற்கு காபிலஸ்நானமென்று பெயர். அதற்கும் அசக்தராயிருப்பவர்கள் ஈரவஸ்திரத்தால் உடம்பை தொடைத்துக்கொண்டாலும் அதுவும் ஸ்நானமே ஆகும். இதற்கும் காபிலஸ்நானமென்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. தினம் ப்ராதஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனாதிகளைச் செய்யமுடியாதவர்கள் இந்த காபிலஸ்நானம் செய்ய விதிக்கப்பட்டிருக்கிறது.

**பார்த்திவ ஸ்நானம்:**—சுத்தமான இடத்திலுள்ள புண்யமான மண்ணையெடுத்து மிருத்திகே ஹனமே பாபம் என்ற மந்திரத்தைச் சொல்லி



சரீரத்தில் அதைத் தடவிக் கொண்டால் அது பார்த்திவஸ்நானமென்று பெயர். இந்த ஸ்நானத்தில் நம்மவர்கள் கோபீ சந்தனத்தால் நாமம் தரித்துக்கொள்ளுகின்றனர். துளஸீ மூல மிருத்திகையையும் தரித்துக் கொள்கின்றனர். ஆகவே இதுவும் ஸ்நானமே.

**வாயவ்ய ஸ்நானம்:**—பசுமாடு கால் குளம்பு பட்ட மண்ணை எடுத்து ஸ்ரீகோபாலகிருஷ்ணனை ஸ்மரித்து சரீரத்தில் அதைத்தடவிக்கொண்டால் அதுவும் ஸ்நானமே ஆகும். இதற்கு வாயவ்ய ஸ்நானமென்று பெயர். மற்ற ஸ்நானங்களுக்கு சௌகரியமில்லாத சமயத்தில் இதுவும் ஸ்நானமேயாகும்.

**திவ்ய ஸ்நானம்:**— உத்தராயணத்தில் வெய்யில் காய்ந்துகொண்டிருக்கையில் மழை பெய்தால் அதில் நனைந்து ஸ்நானமானால் அது திவ்ய ஸ்நானமெனப்படும். இந்த ஸ்நானம் மகா விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நான பலனுண்டு. இந்த சந்தர்பத்தை எதிர்பார்த்துக்கொண்டு இந்திராதி தேவர்கள் பித்ருஜனங்கள், மகரிஷிக்கூட்டங்கள் இந்த ஸ்நானம் செய்ய ஓடிவருகின்றனரென்று பிரமாணங்கள் காணப்படுகின்றன.

**காயத்ர ஸ்நானம்:**— பத்து தடவை காயத்ரியைச் சொல்லி ஜலத்தைஅபிமந்திரித்து அந்த ஜலத்தால் சிரஸ்ஸு முதல் கால்வரை ப்ரோக்ஷணம் செய்துகொள்வது ஓர் ஸ்நானமாகும்.

**த்யான ஸ்நானம்:**— இதற்கு மானஸிக ஸ்நானமென்றும் பெயர் இருந்துவருகிறது. எந்த ஸ்நானத்திற்கும் லாயக்கில்லாதவன் இந்த ஸ்நானத்தைச் செய்யலாம். புண்டரீகாக்ஷனை பகவான் நாராயணன் தன்னுடைய ஹிருதயத்திலிருக்கிறார். அவர் எல்லா மந்திரங்களின் ஸ்வரூபரானவர். அனந்த சூரியன்களைப்போல் காந்தியுள்ளவர். அழகிய கிரீடம் தரித்திருக்கிறார். வனமாலையை தரித்திருக்கிறார். அந்த பகவானுடைய பாதத்தினின்றும் வெளிக்கிளம்பிய கங்கா ஜலமானது தன்னுடைய சிரஸ்ஸில் விழுந்து பிரம்மரந்திரத்தின் வழியாய் தன்னுடைய சரீரத்தில் பிரவேசித்திருக்கிறது. அதனால் தன் சரீரத்திலுள்ள எல்லா தோஷங்களும் அடித்துக்கொண்டு போகப்பட்டிருக்கிறது. என்றிவ்வாறு த்யானம் செய்யவேண்டும். இவ்வாறு தியானம் செய்தால் அந்தக்ஷணமே எல்லா தோஷங்களும் நீங்கி ஸ்படிகம்போல் அவன் சுத்தனாகிறானென்று ஓர் பிரமாணமிருக்கிறது. பகவான் எல்லா பிராணிகளின் ஹிருதயத்திலுமிருக்கிறார். சூரியமண்டலத்திலிருக்கிறார். நீலமேகம்போல் ச்யாமள வர்ணனாயிருக்கிறார். சதுர் புஜத்துடனிருக்

கிறார். என்று ஸ்ரீவாஸுதேவமூர்த்தியை தன் தேகத்தில் த்யானம் செய்துகொண்டால் அது த்யானஸ்நானமாகுமென்று யோகயாக்யவல்க்ய மென்ற நூலில் காணப்படுகிறது. இந்த த்யானஸ்நானம் எல்லா ஸ்நானங்களைவிட உத்தமமானதென்று சொல்லப்பட்டிருக்கிறது. வாருண ஸ்நானத்தைத் தவிர்த்துள்ள மேற்கண்ட ஸ்நானங்கள் கௌணஸ்நானங்களாகின்றன.

வஸ்திரம்:— ஸ்நானம் செய்தபின் நனைந்த இடுப்பு வஸ்திரத்தை காலின் பக்கத்திலிருந்தே எடுக்கவேண்டும். உத்தரீய வஸ்திரத்தை உடுத்திக்கொண்டு உடுத்த வஸ்திரத்தைப் பிழிய எடுத்தாலும் அதை கால் கீழிலிருந்தே எடுக்கவேண்டுமே ஒழிய உயரத்தூக்கி எடுக்கலாகாது. உத்தரீயத்தை மேலிருந்தே எடுக்கவேண்டும். இது மாறினால் உடுத்த வஸ்திரத்துடன் மீண்டும் ஸ்நானம் செய்யவேண்டும். இல்லாவிடில் சுத்தியாகாது. உடுத்திக்கொள்ளும் வஸ்திரம் எட்டு முழமும் புதிதாயும் வெண்மையாயும் உரப்பாயும் இதரர்கள் தரிக்காததாயுமிருக்கவேண்டும். நன்றாய் துவைத்ததும் புதிதும் வெண்மையானதும் 10×8 முழமுள்ளதாயுமிருக்கவேண்டுமென்று மற்றொரு ஸ்மிருதி அறிவிக்கிறது. பாராங்கல்லின்மீது ஓர் காலைத்தூக்கிவைத்துக்கொண்டு அந்த காலுக்கும் கல்லுக்கும் நடுவில் துவைக்கப்பட்ட வஸ்திரம்தான் சுத்தமானது. அப்படியில்லாது வேறுவிதமாய் துவைத்தால் ஸசேல ஸ்நானம் செய்யவேண்டுமென்று ஓர் பிரமாணம் காணப்படுகிறது. பிள்ளைகள் துவைத்தது, ஸ்திரீஜனங்கள் துவைத்தது, பெண்ஜாதி துவைத்தது, உபாயமாய் துவைத்தது இவை துவைக்காததற்கு சமானமே. வண்ணான் துவைத்தது முதல்நாள் துவைத்து வைக்கப்பட்டது இரண்டும் துவைக்காததற்கு ஸமானம். இவ்வாறு துவைக்கப்படாத வஸ்திரத்தை உடுத்திக்கொண்டவன், கச்சம் போட்டுக்கொள்ளாதவன், கச்சத்தை வால்போல் பின்னடி தொங்கவிட்டுக்கொண்டவன், இவர்கள் சுருத்யுக்தமானதோ ஸ்மிருதியுக்தமானதோ காரியத்தைச் செய்தால் அந்த காரியம் நிஷ்பலமானதே. அழுக்கடைந்த வஸ்திரமுள்ளவன், நெருப்புப்பட்ட வஸ்திரமுள்ளவன் அறுபட்டவஸ்திரமுள்ளவன், பாதிவஸ்திரமுள்ளவன்; ஒத்தை வஸ்திரமுள்ளவன், வஸ்திரமில்லாதிருப்பவன் இவர்கள் வஸ்திரமுடுத்திக்கொள்ளாது அம்மணமாயிருப்பவர்களே ஆவார்கள். ஈரமான வஸ்திரத்தை பிழியாமல் ஸந்த்யாவந்தனாதிகளைச் செய்யலாகாது. ஜலத்தில் ஸ்நானம் செய்யும்பொழுது உத்தரீய வஸ்திரத்தை தோளின்மீது வைத்துக்கொண்டால் அந்த காரியம் அசுர காரியமாகும். புன: ஸ்நானம் செய்தால் அந்த தோஷம் நிவிருத்தி. ஜலத்திலிருந்துகொண்டு வஸ்திரத்தை பிழியலாகாது. கரையிலிருந்துகொண்டே பிழியவேண்டும். வஸ்திரத்தை மூன்றாய் மடக்கி பிழியலாகாது. (தொடரும்)



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# மணிமஞ்ஜரி.

---

(ஆறாவது ஸர்க்கம்) முன் தொடர்ச்சி.

ஜீவப்ரம்ம பேதத்தையும் ப்ரம்மத்தின் குணபூர்ணத்வத்தையும் சொல்லும் வேதங்களெல்லாம் யதார்த்தமாய் இல்லாததைத்தான் சொல்லுகின்றனவென்று எண்ணி பெரும்பான்மையான வேதங்களை (தத்வமஸி அஹம் ப்ரம்மாஸ்மி முதலான நான்கு ஐந்து வாக்யங்களைத்தவிற மற்ற எல்லாவேதங்களையுமே) நிராகரித்தார். ஜர்ஜரி தூர்பரி ஹாவு ஹாவு முதலான வேதவாக்யங்களுக்கு அர்த்தமில்லாததால் அவைகள் நிரர்த்தகமானவைகள் அப்ரமாணமென்று அப்படி சில வேதங்களை நிராகரித்தார். இவ்வாறு வேதங்களை எல்லாம் நாசமாக்கும் அந்த சங்கரரின் வாதம் வேதாந்த வாதமாவது எப்படியோ தெரியவில்லை. ஆகவே அது வேதங்களை ஒப்புக்கொள்ளாத பௌத்தாதி அவைதிகர்களின் வாதமே ஆகும். சித்தாந்தியான பிரம்மதத்தஸ்வாமி தன் சிஷ்யரான சங்கரர் பிரம்மஸூத்திரத்திற்கு நவீனமாம் பாஷியத்தைச்செய்திருக்கிறாரென்றுகேட்டு அதை சிறிது சிரவணம் செய்யவும், அது அவைதிகமான பௌத்தவாதத்தைச் சொல்வதைக் கேட்டு, ஹாஹா என்று சொல்லி இது சிரவணம்செய்யத்தகாததாயிருக்கிறதாய் இருகாதுகளையும் பொத்திக்கொண்டார். 50. பிரம்மதத்தஸ்வாமியிடம் சங்கரருடன் வேதாந்த அப்யாஸம் செய்த பாஸ்கராசாரியார் பிரம்மஸூத்ரங்களை அநுஸரிக்காதிருக்கும் அந்த துஷ்டமான சங்கரபாஷியத்தை கடினமான தூஷணாநுமானங்களால் கண்டனம் செய்தார். ஆயினும் இயற்கையாகவே ஸ்ரீஹரித்வேஷிகளான அஸுரர்கள் எல்லோரும் வேதங்களுக்கு விரோதியாயுள்ள அந்த சங்கரரின் சாஸ்திரங்களை படனம் செய்தனர். 51. ஆஸ்திகர்களிலும்கூட கலி முதலான தைத்யர்கள் பிரவேசித்தனராதலால் அவர்களும் சங்கரருக்கு சுவாதீனமாகி ஜீவனும் பரபிரம்மமும் ஒன்றென்ற அவருடைய அத்வைத மதத்தை அன்புடன் ஏற்றுக்கொண்டனர். 51. உலகில் எல்

லோரையும் வசியம்செய்துகொள்ளவும் தன்னுடைய துஷ்டமான இந்த மாயாவாத மதத்திலிருந்து விலகியிருப்பவர்களை மாரணம் செய்யவும் பைரவி மந்த்ரம் முதலானவைகளாயுள்ள சக்தியை தெய்வமாகக்கொண்ட பலவகைமந்த்ரங்களை சங்கரர் அப்யஸித்து அந்த மந்த்ரங்களின் ஸித்தியைப்பெற பைரவி என்ற ஓர் மந்த்ர தேவதையே அவருக்கு தொண்டு புரிந்து வந்தது.

சங்கருடைய மதம் பௌத்தமதமே என்றும் வேதாந்தமல்லவென்றும் சொல்லப்பட்டது. அவரிடம் ஸன்யாஸதர்மமும் சற்றுமிருந்திருக்கவில்லை என்பதும் இதில் விவரிக்கப்படுகிறது.

1. சங்கரர் இவ்வாறு பைரவி முதலான மந்த்ரங்களை சுவாதீனம் செய்துகொண்டு ஆங்காங்கு பண்டிதர்களை ஜயித்து தன் வசமாக்கிக்கொண்டு விச்வரூபாசாரியார் என்ற ஓர் பிரஸித்த பண்டிதரின் வீட்டிற்கு அவருடன் வாதாட உத்தேசித்துச்சென்றார். அங்கு அவருடைய பாரியாளைப்பார்த்து மன்மதபாதைக்குள்ளாகி அவளுடன் சம்போகிக்க தனக்கு இஷ்டமிருப்பதை கண்ணடித்து ஜாடை காட்டினார் 2. உடனே விச்வரூபாசாரியாரின் பாரியாளும் சம்மதிக்க இருவர்களின் மனமும் ஒன்றுபட்டது. சங்கரர் அன்றிரவு ஏகாந்தமாய் நான் உன் வீட்டிற்குள் வந்து மெதுவாக ஓர்வகை சப்தம் செய்கிறேன். உடனே ஏதாவது சாக்கு போக்கு சொல்லி பர்த்தாவைவிட்டு என்னிடம் வந்து சேர். எங்கள் மனோபீஷ்டத்தை பூர்த்திசெய்துகொள்ளலாமென்று சொல்லிப்போனார். அவ்வாறே யதீசுவரரான சங்கரர் இரவில் முத்தத்தின் வழியாய் உயரவிருந்து கீழே குதித்து தன்னை ஒருவரும் கண்டுகொள்ளாதபடி வெளிப்புறத்தில் பதுங்கி இருந்து காலையில் பேசிக்கொண்டபடி மெதுவாக ஓர் விலக்ஷணமான சப்தம் செய்தார். 3. அப்போது விச்வரூபாசாரியாரின் பாரியாளான ஸரஸ்வதியம்மாள் தன்பர்த்தாவுடன் படுக்கையில் படுத்திருந்தாள். அப்போதே விச்வரூபாசாரியாருக்கு சிறிது தூக்கம் பிடித்திருந்தது. இதைக்கண்டுகொண்ட ஸரஸ்வதியம்மாள் "பூசனிக்காய் உயரக்காய்த்திருந்தது. கீழே விழுந்துவிட்டதுபோலிருக்கிறது. அதை இப்போதே எடுத்துவருகிறேன்.



விடிந்தால் யாராவது கொண்டுபோய்விடுவார்கள்" என்றுசொல்லிக்கொண்டு தான் பூசனிக்காயைக் கொண்டுவருகிறவள்போல் பர்த்தாவை எண்ணும்படிசெய்து தடபுடலாய் படுக்கைவிட்டு எழுந்து சங்கரர் பதுங்கி இருந்த இடம் போய்ச்சேர்ந்தாள். 4. உயர்ந்து பருத்ததான ஸ்தனபாரங்களுள்ள ஸரஸ்வதியம்மாள் இரவில் ஏகாந்தமாய் தன்னிடம் வந்துசேரவும் அத்யந்தம் பெரியதாயும் பருத்ததாயுமுள்ள அவயவங்களுள்ளவரும் ஸ்தூலமான இடுப்பில் மெல்லிய தோலுள்ளவரும் இவ்வாறு துர்லக்ஷணம் அநேகம் படைத்திருந்தவருமான அந்த துஷ்ட ஸந்யாஸியான சங்கரர் அவளுடன் சம்போகம் செய்தார். 5. அதனால் அந்த அம்மாள் சரீரம் தளதளர்த்துப்போய் மிகவும் சோர்வையடைந்து மெதுவாக நடந்துவந்து விச்வரூபாசாரியாரின் சமீபத்தில் படுக்கையில் வந்து படுத்தாள். விச்வரூபாசாரியார் விழித்து இதுவரையில் எங்கு போயிருந்தாய் என்று கேட்க ஓர் பூசனிக்காய் இந்நேரத்தில் கீழே விழுந்தது. நாளை விடிந்தால் அதையார் கொண்டு போவார்களோ வென்று பயந்து நான்போய் அதை எடுத்து பந்தோபஸ்து செய்து வந்தேன். அதுதான் சிரமமாய் இருக்கிறதென்று சொன்னாள் 6. மறுநாள் காலையில் சங்கரர் விச்சுவரூபாசாரியாருடன் வாதம் செய்ய அவருடைய வீட்டிற்கு வந்து விச்வரூபரே! உம்முடன் ஜல்பவாதம் செய்ய வந்திருக்கின்றேன். எங்கள் வாதத்திற்கு மத்யஸ்தமாக உங்கள் பாரியாளே இருக்கட்டும். அவள் சொன்னபடியே நாமிருவர்களும் செய்வோம் எங்களில் யார் தோற்றபோதிலும் அவர்கள் தன் ஆசிரமத்தை விட்டு வேறு ஆசிரமத்தை அடைய வேண்டும், அதாவது நான் தோற்றுப்போனதாய் உங்கள் பாரியாள் அறிவித்தால் நான் இந்த ஸன்யாஸத்தை விட்டு கிருகஸ்தாசிரமம் அடைகிறேன். நீங்கள் தோற்றுப்போனதாய் உங்கள் பாரியாள் அறிவித்தால், பாரியையுடனிருக்கும் இந்த கிருகஸ்தாசிரமத்தை நீங்கள் விட்டு எல்லாவற்றையும் துறந்து ஸன்யாஸி ஆகிவிடவேண்டும். என்று பந்தயம் போட்டுக்கொண்டு இருவர்களும் வாதம் செய்து வந்தனர். முடிவில் அந்த அம்மாள் தன் பர்த்தாதான் தோற்றுப்போனாரென்றும் அவர் ஸன்யாஸியாக வேண்டுமென்றும் சொன்னாள். 8.

பிறகு சங்கரர் அந்த விச்வரூபாசாரியாருக்கு ஸன்யாஸம் தந்தார். விச்வரூபர் ஸன்யாஸம் பெற்று பாரியையிடமிருந்துவிலகி விடவும் அவளுடன் சங்கரர் ஏதேச்சமாய் ஸுகித்திருந்தார். [குறிப்பு:— இது ஸம்மந்தமாயும் சங்கரரைப்பற்றி மதத்வேஷத்தால் ஸ்ரீநாராயணபண்டிதாசாரியார் தூஷணைகளை சுமத்தி இருக்கலாமோ வென்று சிலர் சம்சயப்படலாம். அத்வைதிகளாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் மாதவீயம் சங்கர விஜயத்திலும் இந்த கதைக்கு ஆதாரமிருப்பதாய் நிச்சயிக்க இடமிருக்கிறது. சங்கரவிஜயத்திலும் விச்வரூபாசாரியாரென்கிற ஸுரேசுவராசாரியாருக்கும் சங்கரருக்கும் வாதம் நடந்ததும் அச்சமயம் அவருடைய பாரியாளாகிய ஸரஸ்வதியம்மாள் மத்யஸ்தமாயிருந்ததும் ஸுரேச்வராசாரியார் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டதும் சொல்லப்பட்டிருக்கிறது. வாதிப்ரதிவாதிகள் பலமான பந்தயம் போட்டுக்கொண்டு மும்முரமாய் வாதம் செய்யும்பொழுது மத்யஸ்தமாயிருக்க இரு கக்ஷிக்காரர்களுக்கும் ஸம்பந்தமில்லாத பொதுவான மனுஷ்யாள் கோரப்படுவார்களேயன்றி வாதத்திற்கழைத்த வாதியான சங்கரர் பிரதிவாதியான ஸுரேவராசாரியாரின் பாரியாளையே அவள் எப்பேற்பட்ட பண்டிதாளாயிருந்தபோதிலும் மத்யஸ்தமாயிருக்கச் சொல்வது ஸகஜமாகுமா? அப்பேற்பட்ட நம்பிக்கை அந்த அம்மாளிடம் ஏற்பட காரணமென்ன? ஒருவள் தன் சொந்த பர்த்தாவை இதராளுடன் கோரமான ப்ரதிக்ஞைசெய்துகொள்ளும்படி விட்டு பலநாள் வாதமாடும்படிசெய்து முடிவில் தன்பர்த்தாவே தோற்றுப்போனாரென்று தானேதீர்ப்பு சொல்லி அவரை ஸன்யாஸம் வாங்கிக்கொள்ளும்படி வற்புறுத்துகிறாளென்றால் பர்த்தாவைவிட வாதியிடம் அவளுக்கு அதிகமான பக்ஷமிருப்பதாய் எண்ணமேற்படுகிறது. மேலும் பர்த்தா ஸன்யாஸம் பெற்றபின்பு காமசாஸ்திரத்தில் இவ்விருவர்களுக்கும் வாதம் நடந்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஸரஸ்வதி அம்மாளுக்கும் சங்கரருக்கும் காமசாஸ்திரத்தில் மட்டில் வாதம் நடந்திருந்தால், சங்கரருக்கு ஸ்திரீ சம்போகம் ஏற்பட்டபின் அந்த க்ரியாஜன்யா ஞானத்தால் பிந்தி ஸரஸ்வதியின்மீது ஜயம் ஏற்பட்டிருக்கவேண்டியதில்லை. ஸரஸ்வதி காமசாஸ்திரத்தில் கேட்ட



பிரச்னத்திற்கு சங்கரர் பால ஸன்யாஸியானதால் பதில் சொல்ல முடியவில்லை என்றும் அதனால் அவர் உடனே அமருகராஜனின் சரீரத்தில் பிரவேசம்செய்து அவனுடைய பத்னிகளுடன் சம்போகம்செய்து அந்தக்ரியையின் ஞானத்தைப்பெற்றுவந்து ஸரஸ்வதியை ஜயித்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் அவளை கேவலம் காமசாஸ்திர ஞானத்தால் மட்டில் ஜயிக்கவில்லை, காமக்ரியாஜன்ய ஞானத்தால் ஜயித்ததென்று அத்வைதிகளாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய் ஏற்படுகிறது. ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாரோ அந்த காலத்திய ப்ரவாதத்தை அனுஸரித்து சங்கரர் அந்த அம்மாளுடன் சம்போகம் செய்ததாகவே வியக்தமாய் கூறியிருக்கிறாரென்று நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறதே ஒழிய மதத்வேஷத்தால் சொன்னதாய் இல்லை என்று நிச்சயிக்கலாம்.]

(தொடரும்.)

## ப்ரமாண சந்திரிகை.

(முன் தொடர்ச்சி)

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் M ராமராவ் எழுதுவதாவது:—

இந்த பூதலத்தில் ஓர் குடமிருக்கிறது என்று கண் கிரஹிக்கும்போது பூதலம் விசேஷணமாயும், குடம் விசேஷ்யமாயும் இருந்து இரண்டுக்கும் ஸம்யோகம் என்ற ஸம்பந்தமிருப்பதால் இது விசேஷண விசேஷ்ய பாவரூபமான ஸம்யோகம். இம்மாதிரியே மீதி சம்பந்தங்களிலும் விசேஷண விசேஷ்யபாவத்தை அறிந்துகொள்ளவேண்டும், என்று இவ்வாறெல்லாம் சொல்கின்றனர். இது தவறு. ஏனெனில் ஸமவாயம் என்ற சம்பந்த விஷயத்தில் யாதொரு பிரமாணமும் கிடையாது. மேலும் குணங்கள் யாவும் ஸமவாய சம்பந்தத்தால் குணிகளிடம் இருக்கின்றன என்று அவர்கள் ஒப்புக்கொள்வதைக்காட்டிலும் குணங்களுக்கும் குணிகளுக்கும் அபேதம் (அதாவது இரண்டும் ஒன்றே) என்றுதான் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும்.

முற்கூறப்பட்ட பிரத்யக்ஷம் (1) ஈசுவரப்ரத்யக்ஷம் (2) லக்ஷ்மீ ப்ரத்யக்ஷம் (3) யோகி ப்ரத்யக்ஷம் (4) அயோகி ப்ரத் என்றும் நான்குவிதமானது என்று அறியவேண்டும்.

ஞானம் என்பது பொதுவாக (1) யதார்த்த ஞானம் (2) ஸம்சய ஞானம் (3) விபரீத ஞானம் என்று மூவகைப்படும். நாம் இதுவரையில் யதார்த்த ஞானத்தின் லக்ஷணத்தையும் மற்றும் பல விஷயங்களையுமே ஆராய்ந்தோம். இப்போது ஸம்சயம் விபரீத ஞானம் என்ற இரண்டைப்பற்றி ஆராய்வோம்.

(10) ஸம்சயம் (ஸந்தேகம்) ஒரே பொருளைப்பார்த்து பரஸ்பரம் விரோதமான அனேக பிரகாரங்களைக் கிரஹிக்கும் ஞானம் ஸம்சயம் எனப்படும். உதாரணம்:— ஓர் உயர்ந்து நீண்டிருக்கும் பொருளைக்கொண்டு 'இது ஓர் மரமா அல்லது புருஷனா?' என்று உண்டாகும் ஞானம். இவ்விதம் ஸம்சயம் ஏற்பட (1) ஸாதாரண தர்மம் (2) அஸாதாரண தர்மம் (3) விப்ரதிபத்தி (4) உபலப்தி (5) அனுபலப்தி என்ற ஐந்தும் காரணங்கள் என்று சிலர் கூறுகிறார்கள். உதாரணம்:— எதிரிலுள்ள ஓர் நீண்ட வஸ்துவில் மரத்துக்கும் புருஷனுக்கும் உதாரணமான (பொதுவான) உயர்ந்திருக்கும் தன்மையைக்கண்டு அம்மாதிரி உயர்ந்திருக்கும் மரத்தையும் புருஷனையும் ஞாபகம் செய்துகொண்டு ஆலோசித்துப் பார்க்கையில் 'இது மரம்தான்' என்று நிச்சயத்தைத் தருவதான மரப்பொந்து, வடுக்கள் முதலிய அடையாளங்களையோ அல்லது 'இது புருஷன்தான்' என்று நிச்சயிக்கத்தகுந்த தலை, கை, கால் முதலிய உறுப்புகளையோ காணாமல் 'இது மரமோ மனிதனோ!' என்ற ஊசலாடும் ஞானம் உண்டாகிறது. இது ஸாதாரண தர்மத்தால் (பொதுவான தர்மத்தால்) உண்டாகும் ஸந்தேகம். (2) சப்தம் என்ற குணம் ஆகாசத்தில்தான் உண்டு. ஆகையால் அது ஆகாசத்தின் அஸாதாரண தர்மம் எனப்படும் இவ்விஷயத்தை அறிந்த ஒருவனுக்கு ஓர் சப்தத்தைக் கேட்டவுடன் "இந்த சப்தம் நித்யமா அல்லது அநித்யமா?" என்ற சம்சயம் உண்டாகிறது. இது அஸாதாரண தர்மத்தால் உண்டாகும் ஸந்தேகம். (3) வைசேஷிகர்கள் என்றும் ஓர் மதத்தினர் இந்திரியங்கள் பௌதிகமானவை (பஞ்ச பூதங்களினால் ஆனவை) என்றும் ஸாங்கியர்கள் என்ற மற்றோர் மதத்தினர் அவை பௌதிகமல்லவென்றும் கூறுகிறார்கள். இவ்வாறு விருத்தமான கக்ஷிகளையறிந்த ஒருவனுக்கு 'இந்திரியங்கள் பௌதிகமானவையா அபௌதிகமானவையா?' என்ற ஸம்சயம் உண்டாகிறது. இது விப்ரதிபத்தியினால் உண்டாகும் ஸம்சயம். (தொடரும்.)



# தலவகார உபநிஷத்.

(முன் தொடர்ச்சி.)

## இரண்டாவது கண்டம்

பரப்ரம்மம் மனதால் அறியப்படாதவர் மனோபிமானி தேவதையாலும் அப்படியே சக்ஷுராதிகளின் அபிமானி தேவர்களாலும் அறியப்படாதவரென்று சொல்லப்பட்டது. மனோபிமானியான இந்திரன் முதலியவர்களால் பரப்ரம்மம் அறியப்படாமலிருப்பினும் என்னால் அவர் அறியப்பட்டிருக்கிறாரே என்று பரமசிவனுக்கு சந்தேகமுண்டாக அதை ப்ரம்மா நிவிருத்தி செய்கிறார். 1. ஹே ருத்ரா! நீர் ப்ரம்மத்தை நன்றாய் நான் அறிந்திருக்கிறேனென்று எண்ணுகிறாயானால் நீயும் இதர தேவர்களைப்போல் ப்ரம்மத்தின் ஸ்வரூபத்தை சிறிதுதான் அறிவாய். ஏனெனில் அவருடைய ஸ்வரூபம் அனந்தமானது. நீ அந்த பரப்ரம்மத்தை சிறிதுதான் அறிந்திருப்பதைக்கொண்டு பரப்ரம்மத்தின் எந்த ரூபம் உன்னிடம் இருக்கிறதோ, எந்த ரூபம் தேவர்களிலிருக்கிறதோ அது உன்னால் இப்பொழுதும்கூட விசாரம் செய்யப்படத்தகுந்ததாயிருக்கிறது. 2. என்று சதுர்முகன் சொல்ல பரமசிவன் அப்படியானால் இதரர்கள் சம்பூர்ணமாய் ப்ரம்மஞானமடைந்திருக்கவேண்டாம், உங்களுக்கு ஸம்பூர்ணமாய் ப்ரம்மஞானமிருக்கிறதல்லவா என்று ப்ரச்னம் செய்ய ப்ரம்மா சொல்லுகிறார். அக்ஞானிகள்தான் நான் ப்ரம்மத்தை அறிந்திருப்பதாய் என்னைச் சொல்லுகின்றனர். என்னால் பிரம்மம் அறியப்பட்டதாய் நான் அறியவில்லை. ஆனால் ப்ரம்மம் கொஞ்சமேனும் என்னால் அறியப்படவில்லையோ என்றால் நான் முற்றிலும் ப்ரம்மத்தை அறியவில்லையென்றில்லை. ஆனால் சிறிதுதான் அறிவேன். நீங்கள் அப்படி பூராவாய் அறியவில்லையானால் நீர் அக்ஞானியாகவில்லையோ என்றால் எனக்கு அக்ஞானித்வமில்லை. ஞானித்தவம்தானுண்டு, என்னால் ப்ரம்மம் நன்றாய் அறியப்பட்டதென்று அறிந்தவனுக்குத்தான் அக்ஞானித்வமென்பது. என்னால் ப்ரம்மம் நன்றாய் அறியப்

படவில்லை என்று அறிந்தவனுக்கு ஞானித்தவம்தான். எங்களில் யார் அந்த ப்ரம்மத்தை நான் நன்றாய் அறிந்திருக்கிறேனென்று அறிகிறானோ அவன் அந்த ப்ரம்மத்தை அறிவதில்லை. ஏனெனில் அவனுக்குத்தெரிந்தது ஓர் பாகம்தான். நான் ப்ரம்மத்தை அறியவில்லை என்று அறிகிறானோ அவன் ப்ரம்மத்தை அறிகிறான். ஏனெனில் அது ப்ரம்மத்தின் பரிச்சின்னமான ஞானமாகும். இவ்வாறு ப்ரம்மம் சிரவணத்திற்கு ஸம்பூர்ணமாய் எட்டாதவரென்று சொல்லி இப்படியேத்தான் ஸம்பூர்ணமாய் மனனத்திற்கும் எட்டாதவரென்றும் சொல்லப்படுகிறது. யாரால் ப்ரம்மம் என்றால் நன்றாய் மனனத்திற்கு விஷயமாய் செய்யப்பட முடியாதென்று மனனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அவனால் அந்த ப்ரம்மம் மனனத்திற்கு விஷயமாய் செய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில் அந்த ப்ரம்மத்தின் அனந்தத்வத்தை அவன் அறிந்தாகும். யாரால் ப்ரம்மம் என்றால் நன்றாய் மனனம் செய்யப்பட்டிருக்கிறதாயறியப்பட்டிருக்கிறதோ அவன் ப்ரமத்தை அறியவில்லை. ஏனெனில் அந்த ப்ரம்மத்தின் அந்தத்தை யறியவில்லையாதலால் அவன் அறியாதவனே ஆவான் 3. ஸாக்ஷாத்காரமும் ஸம்பூர்ணமாய் இல்லை என்று சொல்லப்படுகிறது. நாம் ப்ரம்மத்தை ஸாக்ஷாத்காரம் செய்திருக்கிறோமென்று அறிந்தவர்களால் அந்த ப்ரம்மமறியப்படவில்லை. ஏனெனில் ப்ரம்மம் அனந்தமென்பது அவருக்கு தெரியவில்லை எங்களால் ப்ரம்மம் நன்றாய் ஸாக்ஷாத்காரம் செய்யப்படவில்லை என்று அறிந்தவர்களுக்கு பிரம்மம் ஸாக்ஷாத்காரம் செய்யப்பட்டதாகும். ஏனெனில் அவர்களால் ப்ரம்மம் அனந்தமென்பது அறியப்பட்டது. ப்ரம்மம் ஸம்பூர்ணமாய் அறியப்படமுடியாமலிருந்தால் அந்தப்பிரம்மத்தால் எப்படி இஷ்டஸித்தி ஏற்படுமென்றால் அவரவர்களின் யோக்கதைக்குத்தகுந்தபடி ஒருபாகம் அறிந்தாலும் அதனாலேயே இஷ்டஸித்தி ஏற்படுமென்கிறார். அவரவர்களின் யோக்யதையை அனுஸரித்து மனுஷ்யர்களால் சிரவணம் செய்யப்பட்டதும், விசாரம் செய்யப்பட்டதும், அறியப்பட்டதுமான ப்ரம்மம் அவர்களுக்கு கிடைக்கிறது. ப்ரம்மஞானமுள்ளவனெவனும் ஸம்ஸாரத்தை அனுபவிக்கமாட்டான். முக்தனாகவே ஆகிறான் (தொடரும்.)



# துளஸியின் மஹிமை.

(முன் தொடர்ச்சி.)

யார் தினம் நூறுதளம் துளசியை ஸ்ரீஹரிக்கு ஸமர்ப்பிக்கிறானோ அவனுடைய புண்யத்தைச் சொல்லமாளாது. பிதா, குரு இவர்களை உத்தேசித்து துளசி அர்சனை செய்தால் பிரம்மஹத்யாதி கோடிக்கணக்கான பாபங்களை தகித்துவிடுமென்கிறது ப்ரம்மாண்டபுராணம். துளசி தளங்களால் பூஜிப்பவன் கோடி ஜன்மங்களிலும் தரித்திரனாவதில்லை. புருஷனோ, ஸ்திரீயோ துளசியை ஸ்மரித்து வந்தால் ஸ்திரீ விதவையாயும், புருஷன் பாரியையில்லாமலுமாவதில்லை என்கிறது காபில புராணம். துளசியின் கோமலமான தளங்களால் பகவன்மூர்த்தியை பூஜிப்பவனின் லோகங்கள் கல்பகோடியானாலும் அழிவதில்லை என்கிறது காந்தீபுராணம். ஆகவே எல்லா துக்கத்தையும் போக்கடிக்கும்படியான துளசி அர்ச்சனையை எல்லா ப்ரயத்தினம் செய்தாவது செய்யவேண்டுமென்கிறது தூர்வாஸபுராணம். துளசியை ஒருவன் பயிரிட்டு அதன் வேறுகள் எவ்வளவு ஓடுகின்றனவோ, அவ்வளவு ஆயிரம் யுகம் ப்ரம்மலோகத்தில் பூஜிக்கப்படுவான் என்கிறது அம்பிகா புராணம். துளசி தளத்துடன் ஒருவன் ஸ்நானம் செய்தால் அவன் எல்லா பாபங்களும் தொலைந்து விஷ்ணுலோகத்தில் ஸுகித்திருப்பான் என்கிறது காளிகா புராணம். ஒருவன் துளசியை பயிரிட வீட்டில் முற்றத்தின் நடுவில் பிருந்தாவனத்தை ஒருவன் கட்டிவைத்தால் அந்த புண்யத்தாலேயே எல்லா பாபங்களும் தொலைந்து ப்ரம்மலோகத்சில் பூஜையைப் பெற்றிருப்பானென்கிறது மரீசி புராணம். யாருடைய வீட்டில் துளசி காடாய் வளர்ந்திருக்கிறதோ அந்த வீடு புண்யதீர்த்தத்திற்கு சமானம். அங்கு யமகிங்கார்கள் செல்லமாட்டார்களென்கிறது ஔசனஸ புராணம். ஸமஸ்த பாபங்களையும் போக்கக்கூடிய புண்யகரமான துளசிவனத்தைப் பயிரிடும் மனுஷ்யர்களுக்கு யமனுடைய பேட்டி ஆவதில்லை என்கிறது ஸௌரபுராணம். துளசிகாஷ்டம் சேர்ந்த சந்தனத்தை ஒருவன் பூசிவந்தால் அவன் அடிக்கடி பாபம் செய்தாலும்கூட பாபலேபம் அவனுக்கிருக்காது என்கிறது ஸௌரபுராணம். துளசீ காட்டின் நிழல் எங்கேயாவதிருந்தாலும் அங்குதான் சிரார்த்தத்தைச் செய்யவேண்டியது. அதுதான் பித்ருக்களுக்கு திருப்தி உண்டாக்குமென்கிறது பாராசர புராணம். யாருடைய முகத்திலும், காதிலும், தலையிலும் துளசிதளமிருக்கிறதோ அவனைப் பார்க்க யமனுமஞ்சுகிறானென்றால் அவனுடைய

கிங்கரர்கள் பயப்படுகிருர்களென்று சொல்வானேன் என்கிறது பாராசர புராணம். துளசியின் மகிமையை யார் தினம் சிரவணம் செய்கிருர்களோ அவர்கள் ஸமஸ்த பாபங்கள் போய் விஷ்ணுலோகத்தில் விளங்குகின் றனரென்கிறது ஸனத்குமார புராணம். துளசி மனுஷ்யர்களுக்கு புண்யத்தைத் தரக்கூடியது. ஸமஸ்த பாபங்களையும் தொலைக்கக்கூடி யது. ஸ்ரீலக்ஷ்மீபதியின் ப்ரஸாதத்தால் க்ஷீரஸமுத்திரத்திலுண்டான தென்கிறது பிருஹந்நாரதீயபுராணம். அப்பொழுது அமிர்த கலசத்தி னின்றும் அமிர்த பிந்துக்கள் விழுந்தன. அந்த பிந்துக்களினின்றும் மங்களகரமான துளசி உடனே உண்டானுள் என்கிறது குமாரபுராணம் துளசியை மடியில் உட்கார்த்திவைத்துக்கொண்டு ஸ்ரீஹரி சிறித்த முகத் துடன் அம்மா எல்லா லோகங்களையும் பரிசுத்தப்படுத்துவாய் என்று வரனையளித்தாரென்கிறது ஹம்ஸபுராணம். ஹிருசீகேசனுன நாரா யணனை துளசியின் கோமளமான தளங்களால் எப்பொழுதும் பக்தி யுடன் பூஜிக்கவேண்டும். அதனுல் ஸர்வாபீஷ்டத்தையும் மனுஷ்ய னடைகிருனென்கிறது கணேச புராணம். சாஸ்திரங்களில் மகாபாரதம் உத்தமமானது. அதில் விஷ்ணு ஸகஸ்ரநாமம் ஸ்ரீபகவத்கீதை துளசி அர்ச்சனை முக்யமானது. துளசி தளத்தை தினம் அர்பணம் செய் கிறவன் எண்ணிறைந்த அபராதங்களைச் செய்தாலும் பகவான் பொரு த்துக்கொள்வாரென்கிறது நரஸிம்ஹபுராணம். ப்ராதஸ்நானம் செய்து சூரியோதயகாலத்தில் காயத்ரீயை ஜபித்து ஸ்ரீஹரியை துளசிதளத் தைக்கொண்டு பூஜித்தால் பகவானுடைய ஸாரூப்ய முக்தியை அடை வான். மந்திரங்கள், தந்திரங்கள் இவைகளை பூஜாகாலத்தில் வித்யாஸ மாய்ச்சொன்னது காலம் குறைவாகவோ அதிகமாகவோ நடந்தது முதலான ஸமஸ்த தோஷங்களும் துளசி காஷ்டத்தின் துண்டை உப யோகிப்பதால் நீங்குமென்கிறது விஷ்ணு ரஹஸ்யம். துளசி காஷ்டம் ஸம்பந்தமுள்ள அக்னியில் எவன் பார்வண ஹோமம் செய்கிருனே அவன் கயாக்ஷேத்திரத்தில் ஆயிரம் வருஷம் செய்த சிராத்த புண் யத்தை அடைவான். துளசிகாஷ்டத் தணலைக்கொண்டு பகவான் எதிரில் யார் தூபம் போடுகிருரோ அவன் விஷ்ணு லோகத்தை அடைந்து முக்தர்களுடன் சந்தோஷப்படுவான் என்கிறது பாஞ்சராத் ராகமம். ஞானவாசிஷ்டத்தில் துளசி காஷ்டத்தால் தீபாராதனையைச் செய்கிறவன் எல்லா பாபங்களையும் தொலைத்து வைகுண்டத்தில் பூஜிக் கப்படுகிருன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[குறிப்பு:— புராணங்கள் 18. உபபுராணங்கள் 18. புரானங்க ளாவன— 1. பிராம்ம புராணம் 2, பாத்மபுராணம் 3. விஷ்ணு புரா



ணம் 4. சைவபுராணம் 5. லிங்கபுராணம் 6. கருடபுராணம் 7. நாரதீயபுராணம் 8 பாகவதம் 9 ஆக்னேயபுராணம் 10. ஸ்காந்த புராணம் 11. பவிஷ்ய புராணம் 12. ப்ரம்மவைவர்த்த புராணம் 13. மார்கண்டேய புராணம் 14. வாமன புராணம் 15 மத்ஸ்ய புராணம் 16. கூர்மபுராணம் 17. வராஹபுராணம் 18 பிரம்மாண்ட புராணம் உபபுராணங்களாவன— 19. கணேச புராணம் 20. நரஸிம்ஹ புராணம் 21. கபிலபுராணம் 22. நந்திபுராணம் 23. விஷ்ணுரஹஸ்ய புராணம் 24. துர்வாஸபுராணம் 25. அம்பிகா புராணம் 26. காளிகா புராணம் 27. மரீசிபுராணம் 28. ஔசனஸபுராணம் 29. மகேசுவர புராணம் 30. ஸௌரபுராணம் 31 பராசரபுராணம் 32. மௌத்கல புராணம் 33. ஸனத்குமாரபுராணம் 34. பிருஹந்நாரதீய புராணம் 35 குமார புராணம் 36. ஹம்ஸபுராணம். [இந்த எல்லா புராணங்களிலும் துள சியின் மகிமையில் சொல்லப்பட்டிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண் டியதாகும்.]

## சங்கரலீலா விலாஸம்.

(முன் தொடர்ச்சி)

ப்ரஹ்லாதன் தானே விஷ்ணுவென்று எண்ணிக்கொண்டிருந்த தாய் ஏதாவது ஸாவகாசமான சுலோகங்கள் காணப்படினும் அந்த வகை யான உபாஸனை மால்யவான் முதலான அஸுரர்களின் உபாஸனைக்கு ஸமானமாதலால் பிரஹ்லாதனின் உபாஸனையை அறிவிக்கும் நிரவகாச மான ஸ்ரீபாகவத சுலோகமாகிய ஸத்யம் விதாதும் நிஜ பிருத்யபாஷிதம் என்பதை ஒட்டி ஸாவகாசமான சுலோகத்திற்கு அர்த்தத்தைத் தர வேண்டியதவசியமாகும். ஆதலால் கிருதயுகத்தின் ரிகார்டுகள் பேதத் தையும் விஷ்ணுவின் ஸர்வோத்தமத்வத்தையும் அறிவிக்கின்றன.

த்ரேதாயுகத்தின் ரிகார்டுகளும் இப்படியேத்தானிருக்கின்றன. க்ஞானிகளில் உத்தமரான ஹனுமார் சத்ருவான ராவணனுடைய ஸபையில் தன்னுடைய சாமர்த்தியத்தைச் சொல்லிக்கொள்ளும் ஸந்தர்ப் பத்தில் பரப்ரம்மமாகிய நாராயணருடைய அவதாரமான ஸ்ரீராமருக்கும் தனக்குமுள்ள ஸம்பந்தத்தை இவ்வாறு வர்ணித்திருக்கிருர். "தா ஸோகம் கோஸலேந்திரஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண:" என்று பரப்ரம் மத்திற்கு தான் கிங்கரனென்பதாய் ஜீவப்ரம்மபேதத்தையும் ராமனு டைய ஸர்வோத்தமத்வத்தையும் சொல்லிக்கொண்டிருக்கிருர். ஸ்ரீராம ரும் இந்த அபிப்பிராயத்தை ஆமோதித்திருக்கிருர். ஹனுமார் தனே

208707

விஷ்ணு என்றாவது அல்லது ஸ்ரீராமர் மித்யை என்றாவது சொல்லவில்லை. ஆகவே த்ரேதாயுகத்தின் ரிகார்டுகளும் த்வைத தத்வமே, ஸ்ரீராமனுக்கு ஸம்மதமென்றும் நானே விஷ்ணு, விஷ்ணுநாஹம் இத்யாதி உபாஸனைகள் மால்யவான் முதலியவர்களுடையதென்றும் அறிவிக்கின்றன. தவிர இனி வரப்போகும் ப்ரம்மகல்பத்திலும்கூட ஹனுமாரின் ஸித்தாந்தம்தான் எல்லோருக்கும் ஒப்புக்கொள்ளும்படி ஏற்படப்போகிறதென்று ஆதாரங்களும் காணப்படுகின்றன. ஸ்ரீமத் ராமாயணம் உத்தரகாண்டத்தில் "நஹ்யஸ்யகஸ்சித் ஸதிருசோஸ்தி சாஸ்த்ரே வைசாரதே சந்தகதௌ ததைவ| ஸர்வாஸு வித்யாஸு தபோவிதானே ப்ரஸ்பர்ததே யோஹி குரும் குரூணாம்|| ஸோயம் நவவ்யாகரணார்த்த வேத்தா ப்ரம்மா பவிஷ்யத்யபிதே ப்ரஸாதாத்" என்று ஹனுமார் ஜகத் குருவென்றும் சதுர்முகனின் ஸ்தானத்திற்கு வரக்கூடியவரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பரப்ரம்மமாகிய ஸ்ரீராமருடைய அருளாலேயே ஹனுமாருக்கு சதுர்முகனின் பதம் இனி வரப்போகும் ப்ரம்ம கல்பத்தில் வருவதாய் சொல்லப்பட்டிருப்பதால் ஜீவப்ராம்மபேதம் அநந்த கல்பங்களிலேயும் அந்தந்த கல்பத்தின் சதுர்முகன்களுக்கு நித்யம் ஏக ஸ்வரூபனான விஷ்ணுவால் உபதேசிக்கப்பட்டு பரம்பரையாய் வந்து கொண்டிருப்பதாய் நிச்சயமேற்படுகிறது. ஆகவே ஜீவப்ராம்மபேதம் வைதிகமான ஸித்தாந்தமென்றும் இதற்கு மாறான அபேதம் முதலான எல்லா ஸித்தாந்தங்களும் கல்பிதமானவைகளென்றும் ஆகவே அவை அவைதிகமானவைகளென்றும் ஸித்திக்கிறது.

த்வாபரயுகத்தின் ரிகார்டுகளை விமரிசை செய்தாலும் இந்த நிர்ணயம்தானுண்டாகிறது. பாண்டவர்கள் அனன்யசரணாத்மான: என்று வர்ணிக்கப்படுவதால் அவர்கள் பரப்ரம்மமாகிய ஸ்ரீகிருஷ்ணருடைய பக்தர்களென்று ஏற்படுகிறது. தத்வோபதேசம் பெற்ற பின்பும் ஸ்ரீகிருஷ்ணரை ஞானியான அர்ஜுனன் இவ்வாறு ஸ்தோத்திரம் செய்திருக்கிறான். "பரம் பிரும்மபரம்தாம பவித்ரம் பரமம் பவான் | அஸிதோ தேவலோவ்யாஸ: ஸ்வயம்சைவ ப்ரவீஷிமே || ஸர்வமேதத்ருதம் மன்யே யன்மாம் வதஸி கேசவ | பூதபாவன பூதேச தேவதேவஜகத்பதே ||" ஹேஸ்வாமி! நீயே பரப்ரம்மம். நீயே பரம ஆச்ரயம். பரமபவித்ரன். அஸிதரிஷி தேவலரிஷி வேதவ்யாஸர் இவர்கள் நீர் பரபிரும்மமென்று என்னிடம் சொல்லியிருக்கின்றனர். நீயும் அப்படியேதான் சொல்லுகிறாய். ஹே கேசவா! சிருஷ்டிகர்த்தனே! பூதேசுவரா! தேவேசா! ஜகத்பதியே! நீ சொல்வதெல்லாம் நான் ஸத்யமென்று நம்பியிருக்கிறேன்" என்கிறான். மேலும் விச்வரூபத்தைப் பார்த்தபிறகும்கூட "நத்வத்



ஸமோஸ்த்யப்யதிக: குதோன்ய: அநந்த வீர்யாமித விக்ரமஸ்த்வம்| ஸர்வம் ஸமாப்னோஷி ததோஸிஸர்வ:" என்று அர்ஜுனன் சொல்லியிருப்பதால் ஸ்ரீகிருஷ்ணர் ஸர்வோத்தமனென்று சொல்லிவிட்டு வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸமகாத்மா ஸுதுர்லப: என்ற ஸ்ரீகிருஷ்ணரின் ஸந்தேகாஸ்பதமான சுலோகத்திற்கு எங்கும் வ்யாப்தமாயிருப்பதால் உனக்கு ஸர்வனென்று பெயர். நீ ஸர்வத்திற்கும் அபின்னனாய் இருப்பதாலன்று என்று வ்யாக்யானமும் செய்திருக்கிறான். மேலும் இந்த ஸ்ரீகிருஷ்ணரின் காலத்தில் நானே வாஸுதேவனென்று பௌண்டரகன் சொல்லி ஸுவர்ணமயமான கருடனின் மீதேறி ஸ்ரீவத்ஸாதிகளைப்போல் தன் ஹிருதயத்தில் சுட்டுக்கொண்டு கல்பிதமான நான்கு புஜங்களைக் கட்டிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணருடன் யுத்தத்திற்கு வந்து சேரவும் அபேதமதத்திற்கு ஸம்பூர்ண விரோதியான ஸ்ரீகிருஷ்ணர் அவனை தன்னுடைய சக்ராயுதத்திற்கு இரையாக்கியிருக்கிறார். இதனால் ஸ்ரீமத் பாகவதம் த்வைதமதம்தானென்றும் இதுதான் தேவலோவ்யாஸ: என்ற வசனங்களின்படி எல்லா ரிஷிகளுடையவும் வேதாந்த ஸூத்ரகாரரான நாராயணருடையவும் ஸித்தாந்தமென்றும் ஆகவே இதுதான் பரம வைதிக ஸித்தாந்தமென்றும் நிர்ணயிக்கிறது. நாஸ்தி நாராயண ஸமோநபூதோ நபவிஷ்யதி என்று கருடபுராணம், மகாபாரதம் இவைகளில் காணப்படும் வசனங்களாலும் விஷ்ணுதான் ஸர்வோத்தமரென்று நிர்ணயமாகிறது. "அக்னிர்வை தேவானாமவம: விஷ்ணுர்வைபரம:" என்று சுருதியும் நிரவகாசமாய் இந்த அர்த்தத்தைத்தான் போதிக்கிறது.

இப்படி பல யுகங்களின் ரிகார்டுகளை விமரிசை செய்தால் ஜீவப்ரம்மபேதம் அநாதியான வைதிக தத்வமென்றும் அபேதம் முதலான எல்லா தத்வங்களும் வேதாந்தங்களை விட்டு விலகியதென்றும் ப்ராசீன ஸம்பிரதாயமாய் வந்ததல்லவென்றும், கலியுகத்தில்மட்டில் அனுஷ்டிக்கப்பட்டிருப்பதென்றும் காதுக்கு ரமணீயமான ஓர் ப்ரக்ஞாவாதமென்றும் பயங்கரமாய் நிர்ணயம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே அத்வைதத்திற்கு வேதங்களினின்றும் பஹிஷ்காரம் ஏற்பட்டது. அது வைதிக ஸம்ப்ரதாயக்ஞர்களான ப்ரம்மாதி தேவர்களுக்கும் நாரதர், அஸிதர், தேவலர் முதலான ரிஷிகளுக்கும் ஜகத் குருவான வேதவியாஸருக்கும் ஸம்மதமானதல்ல. இப்படி அத்வைதம் முதலான எல்லா அவைஷ்ணவ மதங்களும் தேவ மதத்திற்கு விரோதியாயும் ரிஷிமதத்திற்கு விரோதியாயும், ஸூத்ரகாரருக்கு விரோதியாயும் ஏற்பட்டபின்பு அது தர்மபுத்திரன் ஸபையில் பிராம்மண சாபத்தால் எரிந்துபோன அல்பனான சார்வாகனுடைய கதியை அடைந்துவிட்டதென்று ஹரதீ ஆசாரியார் சொல்லிவிடுவார். (தொடரும்.)

# பீமசேன விஜயம்.

(முன் தொடர்ச்சி.)

இவ்வாறு அவள் ஏழு குமாரர்களைக் கொன்று எட்டாவதாய்ப் பிறந்த குழந்தையையும் வழக்கப்படிக்கொல்ல அவள் எத்தனப்படும்பொழுது) சந்தனு மனம் தாளாமல் அவளைத் தடுத்து "பெண்ணே! நீ யார்! நீ யாரைச்சேர்ந்தவள்! எதற்காக நீ பெற்ற பிள்ளைகளையே இவ்வாறு கொன்றுவருகிறாய்?" என்று கேட்க கங்கை "தான் லோகபாவனையான கங்கைதானென்றும் தான் பெற்ற எட்டு பிள்ளைகளும் அஷ்டவஸுக்களென்றும் வசிஷ்டரின் சாபத்தால் அவர்களுக்கு மனுஷ்ய ஜன்மம் நேரிட்டதென்றும் இந்த கடைசி குமாரனை த்யு என்பவனைத்தவிர மற்ற ஏழுபேர்களை பிறந்தவுடன் சாபவிமோசனம் செய்வதாய்த் தான் ஒப்புக்கொண்டதால் அவர்களின் மனுஷ்ய ஜன்மாவைத் தொலைக்க அந்த ஏழுப்பிள்ளைகளைக்கொன்றதாயும், வசிஷ்டரின் சம்பூர்ண சாபத்தை அனுபவிக்கவேண்டிய இந்த எட்டாவது வஸுவை தான் கொல்லப்போவதில்லை என்று இந்த மகனை அவரிடம் ஒப்புவிப்பதாயும் சொல்லி தன் நிபந்தனையை மீறிவிட்டதால் இனி அவரிடம் இருக்கமுடியாதென்று அறிவித்து அங்கேயே அந்தர்தானமடைந்தாள். பிறகு சந்தனு ஒருஸமயம் வனத்திற்கு வேட்டைக்குச் சென்றிருக்கையில் யமுனையில் படகு ஓட்டிக்கொண்டிருந்த ஸத்யவதி என்ற வேதவியாஸரின் தாயைக்கண்டு மயங்கி அவளை விவாகம் செய்துகொள்ள இச்சித்தார். ஸத்யவதி தன் தந்தையான தாஸராஜனை கேட்கும்படி அனுப்ப தாஸராஜன் தன் மகளான ஸத்யவதியிடம் பிறந்த மக்களுக்கே ராஜ்யம் தருவதாயிருந்தால் அவளை விவாகம் செய்துகொடுப்பதாய் அறிவித்தார். கங்கையிடம் பிறந்த ஜ்யேஷ்ட குமாரரான தேவவ்ரதர் யுவராஜாவாக இருக்க அவரை விட்டு ஸத்யவதியிடம் பிறக்கப்போகிறவனுக்கு எப்படி ராஜ்யம் தரமுடியுமென்று, அவ்வாறு வாக்குத்தத்தம் செய்ய இயலாதவராய் மன்மத பாதைக்கிரையாகி மனக்கவலைகொண்டு பேசாமல் ஊர்வந்து சேர்ந்தார். தேவவ்ரதர் தன் தந்தையின் ஸாரதியின்



மூலமாய் அவருடைய மனக்கவலை அறிந்து தாசராஜனிடம் சென்று தான் இனி கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லை என்றும் அதனால் தன் பிள்ளைக்கு ராஜ்யம் வரக்கூடுமென்று பயம் வேண்டாமென்றும் தான் இனி ஊர்த்வரேதஸ்கனாகவே ஆயுள் முடிய இருக்கப்போவதாயும் பயங்கரமான ப்ரதிக்ஞை செய்து தன் தந்தைக்கு அவருடைய பெண்ணைக்கொடுக்கும்படி வேண்டினார். இவ்வாறு பயங்கரமான ப்ரதிக்ஞை செய்ததால் அவர் பீஷ்மரென்றழைக்கப்பெற்றார். உடனே தாசராஜன் பெண்ணான ஸத்யவதியை பீஷ்மருடன் அனுப்ப பீஷ்மர் அவளை ரதத்திலேற்றிக்கொண்டு தந்தையிடம் கொண்டுவந்துவிட்டு தன் கோரமான ப்ரதிக்ஞையை அறிவித்து அவளை விவாகம் செய்துகொண்டு மனக்கவலையற்றிருக்கும்படிச் சொன்னார். சந்தனு அச்சமயம் பீஷ்மருக்கு மகா வரனைத்தந்தார். அவரிடம் தானாக மிருத்யு அணுகலாகாதென்றும் அவர் விரும்பும்பொழுது தான் அவருக்கு மரணமேற்படவேண்டுமென்றும் வரனையளித்தார். ஸந்தனு ஸத்யவதியை மணந்து விசித்ரவீரியன் சித்ராங்கதனென்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றான். சித்ராங்கதன் பாலியத்திலேயே வேட்டைக்குச் சென்றவிடத்தில் சித்ராங்கதனென்ற கந்தர்வனுடன் பெயருக்காக சண்டைபோட்டு இறந்தான். விசித்ரவீரியனுக்கு காசிராஜனுடைய பெண்மக்களான அம்பிகை அம்பாலிகை என்ற இரண்டு ஸுந்தரிகளை பீஷ்மாசாரியார் விவாகம் செய்துவைக்க அவர்களிடம் விசித்ரவீரியன் அளவுக்கு மிஞ்சி காமோபபோகம் செய்ததால் க்ஷயரோகம் ஏற்பட்டு விசித்ரவீரியன் ஸந்ததி உண்டாகாமலேயே பிராணனை விட்டான். இதைக்கண்டு துக்கித்து ஸத்யவதிதேவி தன் மூத்தகுமாரனை பீஷ்மாசாரியாரை அந்த யுகத்தின் வழக்கப்படி வேதவ்யாஸருடைய அவளுடைய தம்பியான விசித்ரவீரியனின் பாரியைகளிடம் ஸந்ததியை உண்டாக்கும்படி கேட்டுக்கொண்டாள். ஊர்த்வரேதஸ்கனாய் இருப்பதாய் தான் ப்ரதிக்ஞை செய்திருக்கிறபடியால் தன்னால் இந்த காரியத்தில் பிரவிருத்திக்கமுடியாதென்றும் பிராம்மணர்கள் மூலமாய் க்ஷத்திரியஸ்திரீகள் மக்களைப் பெறுவது இஷ்டாசாரமாயிருப்பதால் அப்படி ஏதாவது ஏற்பாடு செய்யும்படிக்கும் அவர் சொல்ல ஸத்யவதி, அவருடைய

தந்தையான சந்தநுவின் விவாகமாவதற்கு முன் பராசர முனிவரால் தனக்கு வேதவியாஸர் பிறந்திருப்பதை அறிவித்து விசித்ரவீரியன் எப்படியோ அப்படித்தான் வேதவியாஸரும் தன் மகனுவதால் அவருடைய தம்பியான விசித்ரவீரியனின் பாரியாளிடம் அவரைக்கொண்டு ஸந்ததியையுண்டாக்கலாமாவென்று பீஷ்மரை யோஜனைக்கேட்டாள். அதற்கு பீஷ்மர் ஸ்ரீவேதவ்யாஸரின் மகாமகிமையை அறிந்தவராதலால் அந்த அபிப்பிராயத்தை முற்றிலும் ஆமோதிக்க ஸத்யவதி வேதவியாஸரை ஸ்மரித்தாள். வேதவியாஸர் அக்ஷணமே அங்குவந்துசேர தன்மகனை விசித்ரவீரியனின் வம்சம் முடிவடைந்துபோனதையும் தேசம் அராஜகமாய்த் தத்தளிப்பதையுமறிவித்து விசித்ரவீரியன் அவருடைய தம்பியாதலால் தம்பியின் பத்னிகளிடம் பிள்ளைகளை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். வேதவ்யாஸரும் தன் தாய் சொன்னது தர்மமாயிருப்பதைக்கேட்டு அதற்கு அவர் சம்மதித்து பரிசுத்தமான தன் சரீரத்துடன் ஸம்பந்தப்படைய அந்த ஸ்திரீகளின் சரீரம் சுத்தமாகவேண்டுமென்றும் அதற்கு அவர்கள் ஒருவருஷகாலம் விஷ்ணுபஞ்சக விரதமிருக்கவேண்டுமென்றும் சொன்னார். அவ்வளவு காலம் காத்திருக்கமுடியாதென்று அவர்கள் சீக்கிரமே மக்களைப்பெறும் உபாயத்தைச் செய்யவேண்டுமென்றும் ஸத்யவதி வற்புறுத்தவும் அதற்கு வேதவ்யாஸர் அப்படியானால் பிள்ளைகள் விரூபர்களானாலும் நீ சகிக்கவேண்டியதுதானென்று சொல்லி தகுதியான காலத்தில் சயனுதிகளைத் தயார் செய்துகொண்டு தன்னை ஸ்மரித்தால் தான் வந்து சேருவதாய்ச் சொல்லி மறைந்து சென்றார். பிறகு ஸத்யவதி மூத்த மருமகளான அம்பிகையை அழைத்து பரதவம்சம் க்ஷீணித்துப்போகாமலிருக்க அவள் அவசியம் மகனைப்பெறவேண்டுமென்றும் அதற்காக மகானுபாவரான வேதவியாஸரை ஏற்பாடு செய்திருப்பதாயும் சொல்லி அவளை வேதவ்யாஸருடன் ரமிக்க சம்மதிக்கும்படி செய்தாள். பிறகு அம்பாலிகை ருதுஸ்நானமான பிறகு நற் சுபதினத்தில் தேவரிஷி பிராம்மணுதிகளுக்கு போஜனுதிகளைச் செய்வித்து அம்பிகையை சுத்த வஸ்திரத்துடன் சயனித்திருக்கச் செய்து இப்பொழுது உன் மைத்துனர் இங்கு வருவார். நீ ஜாக்கிரதையாய் அவரை எதிர்பார்த்திரு என்று சொல்லி ஸ்மரித்தாள். (தொடரும்.)



# செய்தித்திரட்டு.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வஸித்தாந்த புபுத்ஸு ஸபாவின் ஆதரவில் அதன் காரியதரிசி ஸ்ரீமான் P. G. வெங்கடசுப்பய்யாவின் ப்ரேரணையின்பேரில் ஷை சபையின் மெம்பர்களே சுயம் ஒவ்வொரு விஷயத்தை ப்ரதி பானுவாரத்திலும் உபன்யாஸம் செய்ய முன்வரவேண்டுமென்று தீர்மானம் நிறைவேறியிருக்கிறதென்றும் அதன்படி அடியிற்கண்ட உபன்யாஸங்கள் நடைபெற்றதென்றும் ஸ்ரீமான் T. G கோகுல சந்திரராவ் அறிவிக்கிறார். 4—6—33 ஸ்ரீமான் வெங்கட சுப்பய்யரவர்களால் பதரிகாசிரம வர்ணனை. அடுத்த பானுவாரம் ஸ்ரீமான் C. P. அப்பண்ணுசாரியாரால் ஸ்ரீமத்வஸித்தாந்த ஸாரம். அடுத்த பானுவாரம் ஸ்ரீமான் நரஸிம்மாசாரியாரால் தத்வஸங்க்யானம். 25—6—33 வயன்று தாராபுரம் தாசில்தார் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸராவ் அவர்களால் ஹரிசரணப்ரசம்ஸை. 11-7-33 முதல் 3 நாட்கள் ஸ்ரீஜயதீர்த்தரின் புண்யதினத்தை முன்னிட்டு ஸ்ரீமவே தெக்கலூர் கிருஷ்ணுசாரியாரால் டீகாகிருத்பாதாஷ்டகம். 12-7-33 காலையில் ஆஞ்சனேயர் அபிஷேகமும் மாலையில் ஸ்ரீமான் H. ஸ்ரீனிவாஸாசாரியாரால் ஸ்ரீஜயதீர்த்தரின் சரித்திரம் 13-7-33 ஸ்ரீமவே தெக்கலூர் கிருஷ்ணுசாரியார் தத்வ ப்ரகாசிகையின் ஸாராம்சம் பிரதிதினம் ஸ்ரீமான் நரசிம்மாசாரியாரால் ஜயதீர்த்தரின்பேரில் தாஸர்பதங்கள் பாடப்பட்டன.

* * * * *

சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்கு ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் ஹைதராபாத் பிராந்தியத்திலும் ஸ்ரீவியாஸராஜமடம் ஸ்வாமிகள் ஸத்யமங்கலம் ப்ராந்தியத்திலும் ஸ்ரீராகவேந்திரஸ்வாமி மடம் ஸ்வாமிகள் மந்திராலயத்திலும் உட்கார்ந்திருப்பதாக நம்பத்தகுந்த செய்தி எட்டியிருக்கிறது.

* * * * *

இந்நகரில் ஸ்ரீஜயதீர்த்தரின் புண்யதினத்தை முன்னிட்டு ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தானுதிபதி ஸ்ரீமத்ஸத்யத்யான தீர்த்த ஸ்ரீபாதாளின் மேற்பார்வையிலுள்ள திருப்பதி ஸ்ரீமத்வஸித்தாந்த அபிவிருத்திகாரிணி ஸபையின் ஸ்ரீமத்வஸித்தாந்த பிரசாராாகிய ஸ்ரீமவே வீரசோழபுரம் பண்டித சிரோன்மணி தர்க்க வேதாந்த வித்வான் கிருஷ்ணுசாரியரவர்களால் ஸ்ரீஜயதீர்த்தரும் அவருடைய உபதேசமும் என்பதைப்பற்றி ஸ்ரீஉத்தராதிமடம் கட்டிடத்திலும் ஸ்ரீமத்வமத்தத்தின் பெருமை என்

பதைப்பற்றி ஸ்ரீலக்ஷ்மீநாராயணஸ்வாமி கோயிலிலும் வெகு அழகாய் உபன்யஸிக்கப்பட்டதென்றும் இரண்டாவது உபன்யாஸத்திற்கு ஏராளமாய் மாத்வர்கள் வந்திருந்து ஓர் வஸ்திரத்தை ஸன்மானம் செய்தனரென்றும் நமது நிரூபர் அறிவிக்கிறார்.

---

## விக்ஞாபனம்.

நாம் விக்ஞாபனம் செய்துகொண்டபடி இம்மித்திரனின் சந்தாதாரர்கள் அதிகரித்ததாய் ஏற்படவில்லையாதலால் தேவைக்குத்தகுந்தபடியே மித்திரனை இனி பிரசுரிக்க உத்தேசித்திருக்கிறோம். கைவசத்திலுள்ள பழைய வாலியங்களையும் குறைந்த விலைக்கு கொடுத்துவிடவும் தீர்மானித்திருக்கிறோம். ஆகவே சந்தாதாரர்கள் முன் வருடங்கள்போல் பிந்தி சேரலாமென்றிருக்காமல் தற்போதே சந்தாதாரர்களாய் சேருவது நலம். பழய வாலியங்கள் இன்ன விலைக்குக் கொடுக்கப்படுமென்பது சீக்கிரமே அறிவிக்கப்படும். எமது சந்தாதார நேயர்கள் தயவுசெய்து தங்கள் நண்பர்களை ப்ரேரிபித்து இம்மித்திரனை ஆதரிக்கும்படி மீண்டும் வேண்டுகிறோம்.

பாகவத ரங்கநாதாசாரியார்,
ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

## விசேஷ தினங்கள்.

---

### பாத்ரபத மாஸம்.

| | | |
|---|---|---|
| 24—8—33 | குருவாரம் | விநாயக சதுர்த்தி ஸாமவேத உபாகர்மம் |
| 25—8—33 | சுக்ரவாரம் | ரிஷிபஞ்சமி |
| 29—8—33 | மங்களவாரம் | ஸ்ரீஜகந்நாததாஸர் புண்ய தினம் |
| 31—8—33 | குருவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 2—9—33 | சனிவாரம் | சிரவணம் உபவாஸம், விஷ்ணுபஞ்சக உப. |
| 3—9—33 | பானுவாரம் | அநந்தவிரதம் |
| 4—9—33 | சோமவாரம் | மகாலயாரம்பம், பௌர்ணமி |
| 9—9—33 | சனிவாரம் | மகா பரணி |
| 11—9—33 | சோமவாரம் | மத்யாஷ்டமி |
| 13—9—33 | புதவாரம் | அவிதவாநவமி |
| 15—9—33 | சுக்ரவாரம் | ஏகாதசி உபவாஸம் |
| 16—9—33 | சனிவாரம் | யதித்வாதசி |
| 19—9—33 | மங்களவாரம் | ஸர்வ பித்ரு அமாவாஸை, விஷ்ணுப உப. |


## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

*R. Bindumathava Rao, Proprictor.*

ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,
20 டவுன்ஹால் ரோடு, மதுரை,
R. ரகூத்தமராவ் மானேஜர்

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3 மாதாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

ஆஸ்த்மா கியூர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர் பாட்டில் ரூ 4—8—0

ஆன்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6 மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India).

# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனைத்திரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னோப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் [தைலம் |
| அம்பர். அரகஜா | பற்பொடி |
| கசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித் தைலம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkatesw… Printing Works and
Published by Bhagavatha Rang… bachariar, Kumbakonam.